விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 25 திங்கட்கிழமை (10.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

# மேலும் 11 பேர் ரி.ஐ.டியால் கைது

## கைதானோர் எண்ணிக்கை 45ஐ தாண்டியது

(யாழ்ப்பாணம்), பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் யாழ்.மாவட்டத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11 பேர் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதனால் கடந்த சில நாட்களில் ரி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 45ஐ தாண்டியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்ப தயான் முடிவு!



பிரான்ஸ் நாட்டிற்கான இலங்கை தூதுவராகப் பணியாற்றும் தயான் ஜெயதிலக, இலங்கை ஜனாதிபதியிடம் சேவை நீடிப்புக் கோராமலேயே நாடு திரும்ப முடிவு செய்துள்ளார்.

இலங்கையின் முக்கிய இராஜதந்திரிகளில் ஒருவராக கருதப்படும் தயான் ஜெயதிலக, பாரிசில் இரண்டு ஆண்டுகளாக இலங்கைக்கான தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

மேலும் ஒரு ஆண்டு அவர் சேவை நீடிப்புக் கோரிப் பெறமுடியும் என்ற போதும், அதற்கு அவர் விண்ணப்பிக்காமல் கொழும்பு திரும்ப முடிவு செய்துள்ளார்.

வரும் ஜனவரி (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளை நாடுகடத்துவதை ஆஸி மீள் பரிசீலிக்க வேண்டும்

### அரியம் எம்.பி வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு முழுமையான அமைதி திரும்பாத நிலையில் அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை தமிழர்களை நாடு கடத்துவதை அவுஸ்திரேலிய அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்கோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவுஸ்திரேலியாவிலிருந்து அண்மைக் காலமாக கடல் மார்க்கமாக உயிரை பணயம் வைத்து தங்களது உயிரைக் காத்துக் கொள்ளச் செல்வோரை மனிதாபிமானமற்ற முறையில் திருப்பியனுப்புகின்றீர்கள். அவ்வாறு திருப்பியனுப்பப்படுகின்றவர்களின் பாதுகாப்பை அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதிப்படுத்துகின்றதா? திருப்பியனுப்பப்படும் தமிழ் இளைஞர்கள் இங்குவரும்போது அவர்கள் கைது செய்யப்பட்டு சொல்லொணா சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அத்துடன் அவர்கள் தொடர்ந்து புலனாய்வுத்துறையினரின் கெடுபிடிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். இவர்களை அங்கிருந்து திருப்பியனுப்பும்போது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு பிரச்சினையில்லையென்றே நீங்கள் தமிழர்களை அங்கிருந்து திருப்பியனுப்புகின்றீர்கள். ஆனால் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றேபோதும் இந்தநாட்டில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை பறைசாற்ற.

இங்குள்ள தமிழ் இளைஞர்கள் தமது உயிரைப் பணயம் வைத்து கடல் தாண்டி வருவது என்பது அவர்களின் உயிரைக் காத்துக் கொள்ளும் நோக்குடனேயே என்பதை அவுஸ்திரேலிய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## 7 மாணவர்கள் நேற்று விடுதலை

### 4 மாணவர்கள் தொடர்ந்தும் தடுப்பில்

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களில் 7 பேர் நேற்று நள்ளிரவு 11 மணியளவில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மருத்துவபீடத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும் விஞ்ஞான பீடம் மற்றும் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மாணவர்களுமாக 7 பேர் நேற்று அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ரி.அபராஜீகன் (திருகோணமலை), செல்வநாயகம் ஜனகன் (யாழ்ப்பாணம்), கனகராசா சஞ்சீவன் (கிளிநொச்சி), சத்தியமூர்த்தி பிரசன்னா (புன்னாலைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக ஐ.நாவின் மற்றொரு விசாரணைக் குழு

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றுமொரு விசாரணைக்குழுவை நியமித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் யோசனையில் பிரதிப் பொதுச் செயலாளர் ஜேன் அலியசனின் தலைமையில் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இலங்கை தொடர்பில் நிறுவப்பட்டுள்ள மூன்றாம் விசாரணைக்குழு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் ஐக்கிய நாடுகளின் உயரதிகாரி சாள்ஸ் பெட்ரியினால் இலங்கை தொடர்பில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வன்னிப் போரின்போது பொது மக்கள் உயிரிழப்புக்களை ஐக்கிய நாடுகள் அமைப்புத் தடுக்கத் தவறியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் ஜேன் அலீசனின் (20ஆம் பக்கம் பார்க்க)


## கழிவு வாய்க்காலில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தலையில் காயத்துடன் கழிவு நீரோடும் வாய்க் காலினுள் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த ஆணொருவரின் சடலம் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.பொது நூலகத்திற்கு முன்பாகவுள்ள கழிவு நீரோடும் வாய்க்காலினுள் (குந்தை (20ஆம் பக்கம் பார்க்க)



## புதிய பிரதம நீதியரசரை ஏற்கப் போவதில்லை

### சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

பிர்தம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு பதிலீடாக புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டால் அந்தத் தீர்மானத்தை ஏற்கப் போவதில்லை என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், புதிய பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என ஐக்கிய நாடுகள் அமைப்பு, பொதுநலவாய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி விலக்கப்படுவதனை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ந-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய வீடமைப்புத் திட்டத்தில் மன்னார் மக்களுக்கு பாரபட்சம்

## செல்வம் எம்.பி. கவலை

(மன்னார்)

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் மன்னார் மக்களுக்கு பாரபட்சம் இழைக்கப்பட்டு வருகிறது. திட்டம் தொடர்பில் முறைகேடுகள்இடம் பெற்றுள்ளதாக தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இந்திய வீடமைப்புத்திட்டப் பங்கீட்டில் சமபங்கு பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சில அரசியல் வாதிகளின்தலையீட்டினை தடுக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார்.

இந்திய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் மன்னாரில் இ பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் பகிர்ந்தளிககப்பட்டுள்ளன. பகிர்ந்தளிக்கப் பட்ட 380 வீடுகளில் 256 வீடுகள் முஸ்லிம்களுக்கும் 124 வீடுகள் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதில்பெரியஅநியாயம்நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களைப் போன்று முஸ்லிம்களும் இடம்பெயர்ந்தவர்கள்என்பதுமறுப்பதற்கில்லை. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகிர்ந்தளிப்பதில்விகிதாசாரம்பேணப்படவேண்டும் அல்லது இரண்டு சமூகங்களுக்கும் சமமான பகிர்வு இடம்பெற வேண்டும் என்றே நாம் கோருகின்றோம். இந்த விடயங்களில் அரசியல் வாதிகளின் தலையீட்டை நாம் விரும்பவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (ந-11)

# இலங்கை மொடல் அழகி நாடு திரும்பினார்!

## மனநிலை பாதித்த நிலையில்

(புதுடில்லி)

புதுடில்லிஇந்திராகாந்திவிமானநிலையத்தில் மன நிலைபாதிக்கப்பட்டவாறு இரண்டுநாட்களாக தங்கியிருந்த இலங்கை மொடல் அழகிநாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர் விமான நிலையத்தில் இரண்டு நாட்களாக உணவு, நீர் அருந்தாமல் தங்கியிருந்துள்ளார். இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த மொடல் அழகி கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்.

இவர் மன அழுத்தத்தினால் தற்கொலைக்கு முயன்றதாக சந்தேகிக்கப்படுகிறது. 25 வயதான இவர் மொடலிங் செய்வதற்காக இந்தியா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதன்கிழமை இவர் கொழும்பு வரவிருந்தார். ஆனால் இரண்டு நாட்களாக விமானத்தில் ஏறாமல் விமான நிலையத்தில் உணவு, நீர் அருந்தாமலும் தூங்காமலும் யாருடன் பேசாமலும் தங்கியிருந்தார்.

இவர் மீது சந்தேகமடைந்த பாதுகாப்பு அதிகாரிகள் விசாரித்த போது அவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

புறத்தோற்றத்தில் பார்க்கும் போது இவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தபட்டிருக்கலாம் அல்லது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் வைத்தியர் இதனை உறுதிப்படுத்தவில்லை. பின்னர் அதிகாரிகள் அவரை அமைதிப்படுத்தி கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ந-11)

# சலுகையை நீடித்தது அமெரிக்கா!

(நியூயோர்க்)

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடையிலிருந்து இலங்கை உள்ளிட்ட 9 நாடுகளுக்கான சலுகையை அமெரிக்கா நீடித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் மேற்கண்ட முடிபை அறிவித்துள்ளது.

ஏற்கெனவே கடந்த யூன் மாதத்திலிருந்து 6 மாதங்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டிருந்தது.

இச் சலுகையையே ஒபாமாவின் நிர்வாகம் இலங்கை உள்ளிட்ட ஒன்பது நாடுகளுக்கு நீடித்துள்ளது. (ந-11)

# தீர்மானம் தொடர்பில் பத்து நாள் விவாதம்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றில் பத்து நாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை அறிக்கை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நியதிகளுக்கு அமைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மாத காலத்தின் பின்னரே விவாதங்களை நடத்த முடியும். இதன்படி எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்த விவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-11)

# பொன்விழா நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

1962ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இவ் வித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய விழாவினை பாடசாலை ஒன்றியம் தலைமை ஏற்று நடத்துகின்றது.

இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மா.ராஜகுமார் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ச.கனகரட்ணம், துணுக்காய் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.ஜெயபாலன், சட்டத்தரணி த.பரஞ்சோதி, முல்லைத்தீவு கச்சேரி தி பணிப்பாளர் ஜெ.கணேச மூர்த்தி, முல் த்தீவு இராணுவஅதிகாரிஎஸ்.என்.ஐ.ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-8)

# நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து பொதுநலவாயம் விசாரிக்க வேண்டும்

## ஐ.தே.க. வேண்டுகோள்

(கொழும்பு)

நம்பிக்கையல்லா தீர்மானம் குறித்து பொதுநலவாய நாடுகள் (கொமன்வெல்த்) விசாரணை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில்பொது நலவாயநாடுகள்விசாரணை செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மாவிடம், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாட்டுகளிலிருந்து தெளிவாக விலகிச் செல்கின்றமை அம்பலமாகியுள்ளது என மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பழி வாங்கும் நோக்குடன் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் சுமத்தியுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ந-11)

# நாட்டை நிர்வகிக்க மக்கள் துணை அவசியம்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)



நிறைவேற்றதிகாரம், அரசியலமைப்பு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் பொது மக்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் அமைய வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாருக்கும் குற்றம் சுமத்தும் வகையில் தனது சுயகௌரவத்தை பாதுகாத்து செயற்படுவதற்கு நீதிமன்றம் முனைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மினுவாங்கொட புதிய நகர மண்டபத்திறப்பு விழாவின் போதே ஜனாதிபதி இந்தவிடயங்களை சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் உள்ள கௌரவம் அற்றுப்போகுமாயின் நாட்டை நிர்வகிப்பதில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என குறிப்பிட்ட அவர்,

நீதிமன்ற கட்டமைப்பை இரண்டாக்கி அரசியல் மயப்படுத்தும் முயற்சிகளும் நாட்டில் இடம் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இந்தநிலையில், தாம் கட்டியெழுப்பிய அரசாங்கத்தை பொது மக்கள் ஒருபோதும் கவிழ்ப்பதற்கு இடமளிக்கமாட்டார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ந-11)




# பிரேரணையின் - இறுதி தீர்ப்பை பொதுமக்களே தெரிவிக்க வேண்டும்

## • மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப்பிரேரணையின் இறுதித்தீர்ப்பு குறித்த முடிபினை பொதுமக்களே தெரிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

முறையான ிதிகளுக்கு அமைய இடம் பெறாத விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை ஒன்றிணைந்த பொது எதிர்க்கட்சி நேற்று கொழும்பில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்.பி.பெரேரா, தற்போதைய அரசாங்கம் தம்மை ஆட்சியில் தக்க வைத்துக் கொள்வதற்கு எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளதயாராக இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ந-11)

பிள்ளையார் இன்
50% கழிவு
இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
இன்றைய விசேட உணவு :-
தோசை சம்பல் சாம்பாருடன் ரூ 70/-
மசால் தோசை சம்பல் சாம்பாருடன் ரூ 90/-
(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8828

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினரும்
திரு.த.கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையாருமான



அமரர் சி.தம்பிமுத்து

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தோற்றம் : 12.12.36
மறைவு : 09.12.2012

பாடசாலைச் சமூகம்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## திருடன் பெற்ற சந்நியாசம்

புத்தர் வாழ்ந்த காலத்தில் கொலைகாரன் ஒருவன் இருந்தான்.

அவன் "கொலை, கொள்ளை" என்று ஏராளமான பாவங்களைச் செய்து வந்தான்.

அவனுக்குத் திடீரென ஒருநாள் ஆசையொன்று பிறந்தது.

"புத்தரைப் பார்க்க வேண்டும்" என்பதே அவனது ஆசை. இதனால் அவரை எப்படிப் பார்ப்பது என்று யோசித்தான்.

இவனது கள்ளத்தனம் ஊரில் இருப்பவர்களுக்குத் தெரியும். ஆதலால் பார்ப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே பலமாக யோசனை செய்தான்.

உடனே அவன் யாருக்கும் தெரியாமல் சுவர்மீது ஏறி குதித்து மடத்திற்குள் செல்லலாம் என்று முடிவு செய்து அதன்படியே செய்தான்.

அவ்வேளையில் புத்தர் வெளியே சென்றிருந்தார். மடத்தினுள் யாரும் இருக்கவில்லை. புத்தரை மடம் பூராகவும் தேடினான்.

அச்சமயத்தில் மடத்தின் சீடர் ஒருவரிடம் அவன் மாட்டிக் கொண்டான்.

அவர் அவனிடம் "நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

அதற்கு அவன், "ஐயா, நான் இங்கு திருட வரவில்லை. புத்தரைப் பார்க்க வேண்டும்" என்ற ஆசையினால்தான் வந்தேன்.

"எனக்கு வேறு எதுவும் இங்கு வேண்டாம். புத்தரை மட்டும் நான் பார்த்தால் போதும்" என்று கூறினான்.

உடனே அந்தச் சீடர் அவனை சாரிபுத்ரன் என்பவரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

அவருக்கு இந்தத் திருடனைப் பார்த்ததும் பெரிய ஆச்சரியம்.

அவர் அவனிடம் விசாரித்தார். திருடனும் தான் வந்த விபரத்தைக் கூறினான்.

உடனே அவர் "நீ எதற்காகப் புத்தரைப் பார்க்க ஆசைப்படுகிறாய்" என்று வினவினார்.

அவன் "எனக்கு இந்த உலகில் எல்லாம் வெறுத்துப் போய்விட்டது. எனது பாவங்களில் இருந்து நான் விடுபட வேண்டும். அதற்குப் பரிகாரமாக சந்நியாசி ஆகி மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறேன்" என்றான்.

"இவன் ஒரு கொலைகாரன். நிறைய பாவங்கள் சம்பாதித்துள்ளான். இவன் சந்நியாசி ஆவதற்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று அங்கிருந்தவர்கள் அமைதியாகப் பேசிக் கொண்டார்கள்.

ஜோதிடம் மூலமாக இவன் முற்பிறவியில் சிறிது புண்ணியம் செய்துள்ளானா என பார்க்கப்பட்டது. அதன்படி இதைவிட கொடிய பாவங்கள் செய்தது வெளி வந்தது. ஒரு சிறிய நல்ல விடயம் கூட செய்யவில்லை. அதனால் எந்தப் பிறவியிலும் விமோசனம் கிடையாது" என்ற முடிவெடுக்கப்பட்டது.

அங்கு கூடியிருந்தவர்கள் "இவனை உடனே வெளியில் துரத்துங்கள்" என்று கூச்சலிட்டனர்.

இதனால் அவன் கோபப்படவில்லை. மாறாக "புத்தரை நெருங்கக் கூட நமக்குத் தகுதியில்லாதபோது, நாம் எதற்கு உயிர் வாழ வேண்டும்?" என்று அவன் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது.

அவன் உடனே மடத்தை விட்டு வெளியேறி வெளி மதில் சுவரில் தலையை இடித்துக் கொண்டு இறப்பதற்கு முயற்சி செய்தான்.

அச்சமயம் பார்த்து வெளியே சென்ற புத்தர் உள்ளே வந்தார்.

மதில் சுவரில் இரத்தம் சொட்டச் சொட்ட தலையை இடித்துக் கொண்டிருந்த அந்தத் திருடனைப் புத்தர் தடுத்து நிறுத்தினார்.

புத்தரைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. புத்தரின் காலில் விழுந்து அழுது புலம்பினான்.

புத்தர் அவனிடம், "என்ன நடந்தது மகனே?" என்று வினவினார்.

அவனும் நடந்தவற்றைக் கூறினான்.

உடனே புத்தர் சீடர்களை அழைத்து, "இவனை ஏன் துரத்தினீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்களும் நடந்தவற்றைத் தெளிவாகக் கூறினார்கள்.

புத்தர் சீடர்களுக்கு "இவனை ஒரு வாரத்தில் சந்நியாசி ஆவதற்குத் தகுதி உடையவனாக மாற்றுங்கள்" என்று கூறினார்.

புத்தர் கூறியதில் சீடர்களுக்கு நம்பிக்கையில்லை.

புத்தர் அந்தத் திருடனைப் பார்த்து, "நீ என்னுடன் இரு" என்று கூறினார்.

புத்தரின் கூட்டுறவால் அந்தத் திருடன், ஒரே வாரத்தில் அடக்கம், அமைதி, சாந்தம் ஆகியவை மேலோங்கி, நல்ல மனிதனாக மாறி, சந்நியாசி ஆக மாறுவதற்குரிய தகுதியைப் பெற்றான்.

சீடர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

சாரிபுத்ரன் புத்தரிடம் "இவன் எப்படி ஒரே வாரத்தில் சந்நியாசி ஆக முடியும்? இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?" என்று கேட்டான்.

அதற்கு புத்தர், "சாரி புத்ரா! நீ மிகவும் நல்லவன். ஆனால், பாவங்களின் சுமை, அதன் தவிப்பு ஆகியவை உனக்குத் தெரியாது.

"உனக்கு அதன் அனுபவம் கிடையாது. அத்தோடு ஜோதிடத்தில் நீ கடந்த காலத்தைத்தான் பார்க்கிறாய். நாம் எப்போதும் எதிர்காலத்தைத்தான் பார்க்க வேண்டும்.

தன்னுடைய பாவச் சுமையில் இருந்து விடுபட இவன் பட்டபாடுதான் விடுதலையைக் கொடுத்தது" என்று கூறினார்.

இந்தக் கதை கூறும் கருத்து என்னவெனில், நல்லவர்களை விட கெட்டவர்களுக்குத்தான் மிக விரைவில் பக்குவ நிலையை அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# போர் முடிந்து 3 ஆண்டுகள் கடந்தும் மக்களின் அவலம் மாறவில்லை

## மாவை சபையில் ஆவேசம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசு விசேட நிதி ஒதுக்கீடுகளைச் செய்வது அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் கஷ்டங்களை, அவலங்களை கருத்திற் கொள்ளாமல் 2013 வரவு செலவுத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நிதி திட்டமிடல் அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும்கூட வடக்குக்கிழக்கில் வறுமை நிலைமை மாறவில்லை. அது மேலும் அதிகரித்துள்ளது. வடக்கு மக்களின் கஷ்டங்கள், அவலங்கள் கருத்திற் கொள்ளப்படாமலேயே இலங்கையின் பொருளாதார மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களுடைய நிலத்தில் தொழிலை மேற்கொண்டு அதனூடாகக் கிடைக்கும் வருவாயில் வாழ்க்கை நடத்தக்கூடிய நிலைமை வடக்குக்கிழக்கில் இன்னும் ஏற்படவில்லை.

எங்கள் பிரதேசத்தில் மூன்றில் ஒரு பகுதியில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்குக் கிழக்கில் இராணுவத்தின் இருப்புக் குறைக்கப்படவேண்டும். அத்துடன் இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களிலிருந்து அது வெளியேறவேண்டும். நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதால் இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் இரண்டு இலட்சம் பேர் நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் இன்று ஒரு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தவர்களாகவே வாழ்கின்றார்கள். குடிமகன் ஒருவன் ஆரம்பத்தில் வாழ்ந்த நிலத்திலேயே மீளக்குடியமர்த்தப்பட வேண்டுமெனஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நாம் இராணுவத்தை அகற்றச் சொல்லவில்லை. அதன் இருப்பைக் குறைக்குமாறும் ஆக்கிரமித்துள்ள நிலத்திலிருந்து வெளியேறுமாறுமே திரும்பத் திரும்பச் சொல்கிறோம். போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 இலட்சத்து 18 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். இதில் 50 ஆயிரம் வீடுகளை இந்திய அரசு கட்டிக்கொடுக்கிறது. உலக நாடுகள் சிலவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சில நூறு வீடுகளைக் கட்டுகின்றன. இது போதாது.

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் தேவை. மீள் குடியேற்ற அமைச்சுக்கு இந்த வரவு செலவுத்திட்டத்தில் 0.03 வீதம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது மக்களின் வாழ்க்கையைக் கட்டி யெழுப்புவதற்குபோதுமானநிதியா? இராணுவத்துக்கு வீடுகள் அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களின் பெற்றோருக்கும் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இதை நாம் ஆட்சேபிக் கவில்லை. அதேபோன்று வடக்கு கிழக்கு மக்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்துமாறு கோருகின்றோம் என்றார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 120 | 50 |
| உருளைக்கிழங்கு | 85 | 120-180 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 | 240 |
| தக்காளி | 80-90 | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 70-80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 70 | 100 | 140 |
| பூசணி | 30-40 | 60 | 40 | 60 |
| புடோல் | 40-50 | 60 | -- | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 170 | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 160 | 140 |
| கறிமிளகாய் | -- | 200 | -- | 200 |
| முருங்கைக்காய் | -- | 400 | -- | -- |
| போஞ்சி | -- | 120 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 45 | 60 | -- | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100-120 | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 30 | 30-35 | 30-35 |

# இராசி பலன்

*10.12.2012*
*(கார்த்திகை 25, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*துவாதசி முன்னிரவு 9.47 மணிவரை*
*சுவாதி முன்னிரவு 11.49 மணிவரை*
*இராகுகாலம் 7.47-9.19 மணிவரை*
*சுபநேரம் 12.19-1.49 மணிவரை*
*நான்காவது சோமவாரம்.*

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும், கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, முன்னோர் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சான்றோர் சந்திப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலைதூரச் செய்திகள் மகிழ்ச்சி தரும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**சிங்கம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் நல்ல விதமாக அமையும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கன்னி** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொழிலில் எதிர்பார்த்த நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களை கேட்டு நடப்பீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், திடீர்ப் பயணத்தால் ஆதாயமுண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** உறவினர் வருகையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும், சயன சுகக் குறைவான நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும்.

**தனுசு** அதிர்ஷ்டகரமான நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், பொது வாழ்வில் புகழ் கூடும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நன்மையுண்டு.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவக் குறைவான நாள், கோபமாக பேசி விட்டு பின்னர் மன வருத்தமடைய நேரிடலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 8 வீதமாக பேண சேமிப்பு அதிகரிக்க வேண்டும்

## மத்திய வங்கி ஆளுநர் கருத்து



நாட்டில் எதிர்வரும் வருடங்களில 8 வீத பொருளாதார வளர்ச்சியைப் பேண வேண்டுமாயின் சேமிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேமிப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அத்துடன், நிதிநிறுவனங்களுக்கு அடுத்த 2 அல்லது 3 வருடங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிறுத்துவதற்கு மத்திய வங்கியின் நாணயசபை தீர்மானித்துள்ளதாகவும் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 8 வீதமளவில் பேணுவதற்கு சேமிப்பு அதிகரிக்கப்படுவது அவசியமாகும். அதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதற்கு அரசு ஏற்கெனவே பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் 564 பில்லியன் ரூபாயாக 2012ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளது. அந்த வகையில் 29 வீதமான வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன என்றார்.

இதேவேளை, நிறுவனங்களின் சிறந்த கணக்காய்வறிக்கை தெரிவுக்கான 48ஆவது வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்,

தற்போதைய நிலையில் உச்ச பொருளாதார வளர்ச்சியை எட்டக் கூடிய சாத்தியம் இலங்கைக்கு உள்ளதாகவும், இதற்காக நிதிசார் அறிக்கைகளை தெளிவாகவும் துல்லியமாகவும் தயாரிக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு வர்த்தக நிறுவனங்களையும் சார்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய தனிநபர் வருமானம் 2,836 அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது.

இந்த பெறுமதியை இரட்டிப்பாக உயர்த்துவதற்கு உறுதியான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவ் விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த கணக்காய்வறிக்கையை தயாரித்த நிறுவனத்துக்கான விருதை ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் தனதாக்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக இலங்கை வங்கி தெரிவு

உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகளுள் ஒன்றாக இலங்கை வங்கி, உலகின் பிரதான வங்கியியல் மற்றும் நிதியியல் சஞ்சிகையான த பேங்கர் சஞ்சிகையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வங்கித் தொழில் உலக முன்னோடிகளின் சாதனை மூலம் அதிசிறந்த 1000 வங்கிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உலகளாவிய வங்கிகளின் பலம், உறுதித்தன்மை, இலாபகரத்தன்மை என்பவற்றை கணிப்பிடுவதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைக்கான வழியென இந்த தரப்படுத்தல் குறியீடு குறிப்பிடுகிறது.

இலங்கை வங்கியானது நாடு பூராகவும் 10 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் துரித சேவையாற்றுவது எங்களது பொறுப்பாகும். இதனால் உள்ளூர் வர்த்தக வங்கி ஒன்றுக்கு வழங்கிய அதியுயர் வீதமான AA+(lKa) தரப்படுத்தல் வீதத்தை லங்கா லிமிட்டட் இலங்கை வங்கிக்கு வழங்கி தேசிய ரீதியில் நீண்டகாலமாக மேம்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கியானது அதன் 73ஆவது ஆண்டு நிறைவை அதாவது அதன் பலம், வெற்றி தேற்றம் ஆகியவற்றின் மிக பரிமாணமான காலத்தை 2012 ஓகஸ்ட் 1-ம் திகதி கொண்டாடியது.

1939ஆம் ஆண்டு தொடக்கம் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையின் தலைவராகத் திகழ்ந்து தேசத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்களிப்பை வழங்கியுள்ளதே இந்த அடைவு ஏற்பட காரணம் என வங்கி அறிவித்துள்ளது.

# நாட்டின் பொருளாதாரத்தில் சவாலை ஏற்படுத்தவுள்ள முதுமை

2036-ம் ஆண்டளவில் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் சவாலை ஏற்படுத்தும் காரணியாக முதுமை அமைந்திருக்கும் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இக்கால கட்டத்தில் சுமார் 100 வயது வந்தவர்களின் 61 பேர் பிறரில் தங்கியிருப்பவராக காணப்படுவர் என அறிவித்துள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 22 வீதமானோர் வயது முதிர்ந்தவர்களாக காணப்படுவர் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக தொழில் வாய்ப்புகள், விதிமுறைகள் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படாத பட்டசத்தில் பெருமளவான குடும்ப அங்கத்தவர்களை பராமரிப்பதற்கான பொறுப்பை குறித்த நபர் அல்லது இருவர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இது குடம்ப சூழ்நிலைக்கும், அரசுக்கும் பெரும் நெருக்கடியாக அமையும் என உலக வங்கி அறிவித் துள்ளது.

# வெளிநாடு சுற்றுலா செல்வோர் 2012இல் 100 கோடியானது



2012-ம் ஆண்டில் இது வரை இல்லாத அளவிற்கு சர்வதேச சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ளது என்று அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் தலைவர் டேவிட் இஸ்கவ்சில் கூறியதாவது,

உலகம் முழுவதுமே மக்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறது இதனால் சர்வதேச சுற்றுலா மிகப்பெரும் வளர்சி கண்டுள்ளது.

இந்த ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலா சென்றவர்களின் எண்ணிக்கை 100 கோடியை தாண்டுகிறது.

இந்த ஆண்டில் சர்வதேச சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை நூறுகோடியை தாண்டுகிறது என்று உலக சுற்றுலா சங்கம் கணக்கிட்டுள்ளது.

லண்டனை தலைமையிடமாகக் கொண்ட பயணம் மற்றும் சுற்றுலா சங்கத்தில் உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயண ஏற்பாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் இடம் பெற்றுள்ளனர்.

இந்த சங்கம் சர்வதேச விமான நிலையங்களில் இருந்து விசா மற்றும் இதர ஆவணங்கள் மூலம் நாடுவிட்டு நாடு செல்பவர்களின் எண்ணிக்கையை கணக்கிடுகிறது.

தற்போதுள்ள கணக்குகளின் சராசரியைக் கொண்டு பார்த்தால் 100-வதுகோடிசுற்றுலாப்பயணிவரும் 13-ம்திகதி ஒருநாட்டின் எல்லையைக் கடப்பார் என்று கணிக்கிறோம்.

உலக அளவில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகள்தான் சர்வதேச சுற்றுலாவில் முன்னிலையில் உள்ளன.

பாரிஸ், லண்டன், நியூயோர்க், துருக்கியின் அன்டால்யா ரிசார்ட் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் முன்னணி வகிக்கின்றன என்றார்.

# தங்கத்தின் விலை குறைவு

தங்கத்தின் விலை தற்போது ஓரளவு குறைந்து வருவது பெண்கள் மத்தியின் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் சர்வதேச ரீதியிலும் தங்கத்தின் விலையில் ஏற்பட்ட சிறிய சரிவுக்கு 3 விதமான காரணங்கள் தெரிவிக்கப்படுகிறது.

எண்ணெய் வளம் கொண்ட எகிப்து, சிரியா நாடுகளில் தற்போது உள்நாட்டு பிரச்சினை உள்ளது.

பாலஸ்தீனம், இஸ்ரேல் இடையேயும் பிரச்சினை இருந்து வருகிறது. இதனால் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தங்கம் வாங்குவதற்கு பதில் எண்ணெய் வாங்குவதற்கு இதர நாடுகள் ஆர்வம் காட்டுவதால் தங்கத்தின் விலை குறைந்துள்ளது.

இதேவேளை இந்தியாவில் தங்கத்தின் விலை எவ்வாறு அதிகரித்து வந்தது என ஓர் ஆய்வின் முடிவு இதோ...

**தங்கம் கடந்துவந்த பாதை...**

1 பவுண் தங்கத்தின் விலை 1930ஆம் ஆண்டு முதல்..

| | | |
|---|---|---|
| 1930 | - | ரூ.14 |
| 1935 | - | ரூ.24 |
| 1940 | - | ரூ.28 |
| 1945 | - | ரூ.49 |
| 1950 | - | ரூ.79 |
| 1955 | - | ரூ.63 |
| 1960 | - | ரூ.88 |
| 1965 | - | ரூ.56 |
| 1970 | - | ரூ.147 |
| 1975 | - | ரூ.432 |
| 1980 | - | ரூ.1064 |
| 1985 | - | ரூ.1544 |
| 1990 | - | ரூ.2520 |
| 1995 | - | ரூ.3600 |
| 2000 | - | ரூ.3480 |
| 2005 | - | ரூ.4640 |
| 2006 | - | ரூ.7680 |
| 2007 | - | ரூ.7600 |
| 2008 | - | ரூ.9200 |
| 2009 | - | ரூ.10944 |
| 2010 | - | [illegible] |
| 2011 | - | [illegible] |

# காப்புறுதி நிறுவனமான AIA இலங்கைக்குள் பிரவேசம்

வரையறுக்கப்பட்ட AIA குழுமம் இலங்கை காப்புறுதி நிறுவனமான அவிவா என்டிபி காப்புறுதி நிறுவனத்தில் 92.3% பங்குகளை அந் நிறுவனத்தில் பெரும்பான்மை பங்குரிமையை கொண்ட அவிவா என்டிபி ஹோல்டிங்ஸ்(தனியார்) நிறுவனம் ஊடாக பிரித்தானிய காப்புறுதி நிறுவனமான அவிவா மற்றும் இலங்கையின் என்டிபி வங்கி மூலம் கேயேற்பதற்கு உடன்பட்டுள்ளது. இதன்மூலம் என்டிபியுடன் 20 வருட கால உடன்படிக்கையில்அந்நிறுவனம் ஈடுபடுகிறது.

# இணையத்திற்குள் பிரவேசிக்கும் சமையல் காஸ் சிலிண்டர்கள்




இணைய வர்த்தக துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திவரும் Anything.lk இணையத் தளம்,

இப்பொழுது இலங்கையில் முதல் தடவையாக எல்பி காஸ் சிலிண்டர்களை ஒன்லைனில் கொள்வனவு செய்திடும் அரிய வாய்ப்பொன்றை வழங்கியுள்ளது.

இந்த இணைத்தளம் இதற்காக லிற்றோ காஸ் நிறுவனத்தாருடன் இணைந்து கூட்டுறவு உடன்படிக்கையொன்றை மேற்கொண்டுள்ளது.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | [illegible] வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5351.25 | 5387.40 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4868.83 | 4893.62 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 2942.02 | 2953.62 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,690.913 |

[illegible] மெற்.ரெஸ்.ஹோல்.(21.00), மேர்.சிப்பிங்(165.00), மடுல் சிமா(16.40), பிப்ள்ஸ் லீசிங்(13.30), குணா போல்ஸ்(60.00).

[illegible] பேருவளை வோல்க்இன்(57.40), பிடிஎல்(41.30), சிஏஎல் பினான்ஸ்(19.00), கெஸ்னர்(161.20), ஹரிச்சந்திர ([illegible]).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | [illegible] ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 127.24 | 130.21 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.73 | 209.46 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 164.17 | 169.51 |
| சுவிஸ் பிராங் | 135.49 | 140.56 |
| கனேடிய டொலர் | 127.58 | 132.08 |
| அவுஸ்திரேலிய டொலர் | 132.40 | 137.36 |
| சிங்கப்பூர் டொலர் | 103.65 | 107.16 |
| ஜப்பான் யென் | 1.53 | 1.58 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.07 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்தின் உதவித்திட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட போரினால், இயற்கை அனர்த்தங்களால் தாய், தந்தையர்களை இழந்த மற்றும் மாற்று திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய முல்லை. கல்வி வலயத்தைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கும் துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்குமாக மொத்தம் 50 மாணவர்களுக் கும் ஒரு மாணவருக்கு ஒரு மாதம் 500 ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு இத்தொகை வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெற்றது. இதன்போது முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரும் கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான நா. வேதநாயகன் ஆரம்ப மாதாந்த கொடுப்பனவை வழங்கினார்.

தொடர்ந்து இவர்களுக்கு மாதாந்த பணம் ஒவ்வொரு மாதமும் வங்கிகளில் வைப்புச் செய்யப்படவுள்ளன. கடந்த 2010 ஆம் ஆண்டு ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 65 பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஒரு வருடத்திற்கு இத்தொகை வழங்கப்பட்டது.மேலும் 50 பல்கலைக்கழக மாணவர்கள் இத்தொகைக் கொடுப்பனவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உள்ளூர் புலம் பெயர் நாடுகளின் உதவிகளைக் கொண்டே இந்நிறுவனம் இவ்வாறான உத விகளைச் செய்து வருகின்றது. இந்நிதிக்காக 500 இற்கு மேற்பட்ட வறிய மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனத்திற்கு உதவ முன்வருவோர் 0212290035 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3-267)

## அமெ.பிடியை தளர்த்தியபோதும் எண்ணெய் பெறுவதில் இடையூறு

(கொழும்பு)

இலங்கை ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் பெறலாம் என கூறி அமெரிக்கா தடையை நீக்கியுள்ள நிலையில் ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை இலங்கை இடைநிறுத்தியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட 20 நாடுகளிற்கு ஈரான் மசகு எண்ணெய் விநியோகிப்பதில் இருந்த தடையை கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேலும் தளர்த்தியிருந்தது.

இந்த நிலையிலேயே ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை இலங்கை இடைநிறுத்தியுள்ளது.

கப்பல் பயண காப்புறுதிகளை வழங்க காப்புறுதி நிறுவனங்கள் மறுத்தமையே இதற்கான காரணம் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது

இதன் காரணமாக அமெரிக்கா நேரடியாக காப்புறுதி நிறுவனங்கள் ,வங்கிகளுக்கு உரிய உறுதிமொழிகளை வழங்க வேண்டுமென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இணைய சேவைகளின் கட்டணங்கள் குறைப்பு

(கொழும்பு)

இணைய மற்றும் புறேட்பான்ட் சேவைகளுக்கான கட்டணங்கள் ஐம்பது வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இக்கட்டண குறைப்பு 20 வீதமாக குறைக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இலங்கையில் 1.2 மில்லியன் மக்கள் இணைய பாவனையாளர்களாக உள்ளனர்.

இணைய பாவனையாளர்களை அதிகரிப்பதே இதன் நோக்கம் என தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித் துள்ளது. (அ-2)

## பணிப்புறக்கணிப்பால் ஒரு கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட 24 மணிநேர பணிப்புறக்கணிப்பின் காரணமாக புகையிரதத் திணைக்களத்திற்கு ஒரு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பு கோரி நேற்று முன்தினம் இப்பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் காரணமாகவே புகையிரதத்திணைக்களத்திற்கு ஒருகோடி ரூபா நட்டம் ஏற்பட்டதுடன் இதனால் 7 இலட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும், உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.0212225392

(சி/1719)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5' 8''<br>கி.பா: 37.25<br>தொழில்/ தகைமை: A/L<br>UK கனடா<br>தொ. இல: B -725 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5' 3''<br>கி.பா: 46.75, 1இல் செவ்.<br>தொழில்/ தகைமை: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>எ.பா: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ. இல: G -726 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5' 4''<br>கி.பா: 16.25, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>மாவட்ட முகாமையாளர் (தனியார்)<br>தொ. இல: B -727 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>உயரம்: 5' 5''<br>கி.பா: 28.75, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BBA Clerk Education Ministry<br>தொ. இல: G -728 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'5''<br>கி.பா: 24<br>தொழில்/ தகைமை: இலங்கை வங்கி ஊழியர்<br>தொ. இல: B -730 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:அவிட்டம் 4<br>உயரம்: 5' 3''<br>கி.பா: 70.75<br>தொழில்/ தகைமை: BA Fine Arts ஆசிரியர்<br>தொ. இல: G -729 |
| பிறப்பு: 1967 இந்துசெங்குந்தர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 11<br>தொழில்/ தகைமை: B.A மேற்பார்வையாளர் (அரச)<br>எ.பா: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ. இல: B -731 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி 3<br>உயரம்: 5' 5''<br>கி.பா: 37.75, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>ஆசிரியை (தனியார் பாடசலை)<br>தொ. இல: G -733 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

மணமகன், மணமகள்

1000 பதிவுகளை நோக்கி..



கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்) எனும் முகவரியில் இயங்குகிறது



சமய, சமூக வேறுபாடின்றி பதிவுகள் நடந்தவண்ணமுள்ளன.

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே...!

செவ்வாய்க்கிழமைகளில் விடுமுறை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

தொடர்பு:-021 720 1005

E-mail: kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முன்பள்ளிகள் வேகமாக அபிவிருத்தி கண்டு வருகின்றன

## கல்வி அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 46 ஆயிரம் முன் பள்ளிச் சிறார்கள் உள்ளனர் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்ப பிள்ளைப்பருவ பிரிவின் ஏற்பாட்டில் வடமாகாண முன்பள்ளி மாணவர்களின் கலாசார விழா மற்றும் கண்காட்சி என்பன நேற்று முன்தினமும் நேற்றும் யாழ். இந்து மகளிர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் ஆயிரத்து 539 முன்பள்ளிகள் தற்போது இயங்கி வருகின்றன. இதில் 2 ஆயிரத்து 847 ஆசிரியர்கள் பணிபுரிவதோடு 46 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகள் மிகவும் வேகமாக அபிவிருத்தி கண்டு வருகின்றன.

கல்வித்துறையில் அத்திபாரமாக இந்த முன்பள்ளிகள் விளங்குகின்றன. குறிப்பாக வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத அளவில் வடக்கு மாகாண முன்பள்ளிகள் முன்னிலை பெற்றுள்ளன.

அத்தோடு முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்ய எதிர்காலத்திலும் நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி:-மிரர்.

# தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு

(சாவகச்சேரி)


தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான வாழ்நிலை அத்தாட்சிப் பத்திரங்கள் தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதிய கிளையினரால் பிரதேச ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்படிவத்தை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்று 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதிய கிளையில் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை சேர்ந்த கிராம அலுவலர்களால் இவ் விண்ணப்பப்படிவம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் அவரது ஓய்வூதியக் கோவை அந்தப் பிரதேச செயலகத்திற்கு மாற்றப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-29)

# சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம்

(மல்லாகம்)



கேதீஸ்வரன்



தபேந்திரன்

கிளிநொச்சிமாவட்டசெயலகத்தினை சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் அண்மையில் சமாதான நீதவான்களாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவித் திட்டப்பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன் அகில இலங்கைச் சமாதான நீதவானாகவும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் யாழ்ப்பாண நீதி நிர்வாக மாவட்டத்திற்கான (யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை சேர்ந்த மாவட்டம்) சமாதான நீதவானாகவும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பொது அமைப்புக்களிலும் முக்கிய பொறுப்புக்களினை வகித்து வருகின்றார். பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையை உருவாக்கியவர்களில் ஒருவராக உள்ளார்.

தபேந்திரன் வடக்கு கிழக்கு மாகாண சபை இருந்தபோது சமூக சேவைகள் உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் செயலாளராக கடந்த 1999 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் கடமையாற்றியுள்ளதுடன் தற்போது வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றி வரும் இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-21)

# முதியோர்கள் நவம்பர் மாத பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான கடந்த நவம்பர் மாத கொடுப்பனவு தொகையான ஆயிரம் ரூபாவை தத்தமது பகுதி அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த ஜுன் மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபா வழங்கப்படுமென அரசினால் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த செப்டெம்பர் மாதம் ஜுன் மாதத்திற்குரிய கொடுப்பனவு தொகையான ஆயிரம் ரூபா சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டது.

நிலுவைத்தொகையுடன் நவம்பர் மாத கொடுப்பனவு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய முதியோர் செயலக அறிவிப்பின் பிரகாரம் நவம்பர் மாதக் கொடுப்பனவுக்கு உரிய அட்டைகள் தயாரிப்பு உட்பட பல்வேறு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்தந்த கிராம அலுவலர்களிடம் கொடுப்பனவு அட்டைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

எனவே, உரியவர்கள் கொடுப்பனவு அட்டையைப் பெற்று கடந்த ஜுன் மாதத்திற்கு முன்னர் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்ற அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் ஆயிரத்து 516 முதியோர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)




## விபரங்களை ஒப்படைக்கவும்

(மல்லாகம்)

இவ்வாண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதற்கமைய 148 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட அங்கத்தவர்களின் பிள்ளைகள் தொடர்பான விபரம் அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் திரட்டப்பட்டு வருகின்றது.

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களது விபரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமையலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்று பூரணப்படுத்தி வழங்குமாறு அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-21)

# 600 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வடமாகாணத்தைச் சேர்ந்த 600 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்கப்படும் என வடக்கு மாகாணஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்ப பிள்ளைப்பருவ பிரிவின் ஏற்பாட்டில் வடமாகாண முன்பள்ளி மாணவர்களின் கலாசார விழா, கண்காட்சி நிகழ்வுகள் ஆகியன நேற்று முன்தினமும் நேற்றும் யாழ். இந்து மகளிர் மண்டபத்தில் இடம் பெற்றது. நேற்று இடம்பெற்ற முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்திலுள்ள முன்பள்ளிகளை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் இந்தப்பிரிவின் முக்கியத்துவத்தை அறிந்து கடந்த 2009 ஆம் ஆண்டு புதிதாக திட்டம் தயாரிக்கப்பட்டது.

அத்திட்டத்தின்கீழ் பிற முன்பள்ளிகள் பல அபிவிருத்தி செய்யப்பட்டதோடு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் என்பனவும் வழங்கப்பட்டன.

குறிப்பாக கல்வி அமைச்சுடன் இணைக்கப்படாமல் இயங்கி வந்த பல முன்பள்ளிகள் எமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இதனூடாக பல மாற்றங்களை அந்த முன்பள்ளிகளில் ஏற்படுத்தியுள்ளோம். இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தப் பாடசாலை மண்டபத்தில் வைத்து டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 600 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இதுதவிர எமது நிர்வாகத்தின் கீழ் இணைத்துக்கொள்ளாத முன்பள்ளிகளை அடுத்த வருடத்தின் முற்பகு தியில் இணைத்துக் கொள்ளவும் தீர்மானித்துள்ளோம். அத்தோடு கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவுகள் அடுத்த வருடம் வழங்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## விழிப்புணர்வு கருத்தமர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் வாய்ச்சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி நூலக மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 9 இற்கு கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 10 இற்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு இன்று திங்கட் கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணி ப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரங்கள் கொள்வனவுக்கு ஜப்பான் 3.7 மில்லியன் வழங்கியது

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமூக நலன்புரி செயற்றிட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் மனித பாதுகாப்பு உதவி திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. செயற்கை உறுப்புக்கள் தயாரிக்கும் வேலைத்தளங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான இயந்திரங்கள் கொள்வனவிற்கு ஜப்பானிய அரசாங்கம் சுமார் 3.7 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள கொழும்பு தேவைக்கு உதவும் சங்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹோபி கொழும்பு தேவைக்கு உதவும் சங்கத்தின் தலைவி கல்யாணி ரணசிங்கவிடம் உபகரணங்களை கையளித்தார்.

கொழும்பில் செயற்கை உறுப்புக்கள் மற்றும் கருவிகளை உற்பத்தி செய்வதற்கான வேலைத்தளங்களை அமைக்கும் திட்டம் கொழும்பு தேவைக்கு உதவும் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் வருடந்தோறும் சுமார் ஆயிரம் பேருக்கு இலவசமாக செயற்கை உறுப்புகள் வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படுகின்றனர்.

இந்த உதவியின் ஊடாக இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவு அதிகரிக்கும் என ஜப்பான் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கூட்டமைப்பு எம்.பிக்களே மாணவர்களை தூண்டி விட்டனர்

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் உயிரிழப்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புவதாக அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மரணம் நேரும் போது சவப்பெட்டி வர்த்தகர் சந்தோசப்படுவதனைப் போன்று மக்கள் இறப்பதனை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விரும்புகின்றது. இதன் காரணமாகவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தூண்டி விடப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலவில்லை.

அவர்கள் இந்திய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வருகின்றனர். இந்த விடயம் குறித்து யாழ்ப்பாண மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மக்களுக்கு வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட காலமொன்றிருந்தது. மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழ் பேசும் சிலருக்கு இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சமாதானமான சூழ்நிலைகளை சிலர் விரும்புவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)




திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக சிறார்களின் கலை விழா நிகழ்வுகள் அண்மையில் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுங்கள்!

## ஐ.நா. குழுவினரிடம் பெண்கள் அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் 7 நாட்டுப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 11 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

மேற்படி குழுவில் அங்கம் வகிக்கும் சில நாடுகளின் பிரதிநிதிகள் அத்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள சோலைவனம் விடுதியில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இதன்போது அங்கு வருகை தந்திருந்த கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டப் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகளால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் பெண்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டதோடு பெண்களின் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, தொழில்வாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் பற்றியும் கருத்துக்கள் கூறப்பட்டன.

மேலும் பொலிஸ் நிலையங்களில் பெண்கள் பிரிவு விரிவாக்கப்பட வேண்டும் எனவும் தமிழ் தெரிந்த பொலிஸ் அதிகாரிகள் குறிப்பாக பெண் பொலிஸ் அதிகாரிகள் தமிழ் பிரதேசங்களில் நியமிக்கப்பட வேண்டும் எனவும் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகளால் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை தவிர கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கிளிநொச்சி சென்றிருந்த பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது விளக்கமளித்த போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வில் இன்னமும் முழுமையான முன்னேற்றம் ஏற்படவில்லை. அவர்களின் முன்னேற்றத்திற்காக ஐ.நா. உள்ளிட்ட நிறுவனங்கள் செயற்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இச் சந்திப்பில் ஐ.நாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கோகன்னவுடன் ஜப்பான், தென் ஆபிரிக்கா, இத்தாலி, பிறேசில், நைஜீரியா, பங்களாதேஷ், ரோமானியா மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த இருவரும் உடனிருந்தனர். (அ-2)

# ஷிராணியின் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் சொத்துக்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

வருமானத்திற்கு மேலதிகமாக சொத்துக்கள் காணப்படுகின்றனவா என்பது பற்றிய விசாரணைகள் நடத்தப்படும் என இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு மேலதிகமாக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவும் விசாரணைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சொத்து விபரங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் சரியானவையா என முதலில் ஆராயப்படவுள்ளது. (அ-2)

## சுமங்கல தேரரை சந்தித்தார் ஷிராணி

(கொழும்பு)

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து சுமார் 20 நிமிடங்கள் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இதனையடுத்து அவர் அஸ்கிரிய மாநாயக்கர் தேரரை சந்தித்துவிட்டு புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு கூடியிருந்த ஊடகங்களிடம் அவர் எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை. பிரதம நீதியரசருடன் அவரது கணவர் பிரதீப் காரியவசம், அவரது மகன் ஆகியோர் சென்றிருந்தனர். (அ-2)

# எமக்கு ஒதுக்கப்பட்ட மைதான காணியை பெற்றுத் தாருங்கள்

## லக்கி ஸ்ரார் வி.கழகம் கோரிக்கை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வருகின்ற லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் மைதானத்திற்கென கடந்த சில காலங்களில் அப்பிரதேச அரச காணி ஒதுக்கப்பட்டபோதும் தற்போது அக்காணியினுள் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அக்காணியை மீளப் பெற்றுத் தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த கழகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், தமது கழகம் 40 ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வருவதோடு தமக்கென ஓர் மைதானம் இன்மையால் பயிற்சிகள், போட்டிகள் போன்றவற்றை கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்திலேயே மேற்கொள்ளப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னரே அன்றைய கிராம அபிவிருத்தி சங்கம், கிராம சேவையாளர், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், மாவட்ட விளையாட்டு அதிகாரி, பிரதேச செயலர், கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட செயலாளர் ஆகியோருடன் ஒழுங்கு முறைப்படி தொடர்பு கொண்டு வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கு அருகாக ஒன்றிணைந்த இரு அரச காணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எல்லைக்கல் நாட்ட முடியவில்லை. அத்துடன் காணி அளவீட்டு வரைபடத்தையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் 2010 இல் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கையில் குறித்த காணியினுள்ளும் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். மேலும் தமது பாவனைக்காக பயிற்சிகளை மேற்கொண்டு செயற்பாடுகளை மேம்படுத்த உதவியாகவும் இக் காணியையே மீளப் பெற்றுத் தர வேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம்.

இவ்விடயம் தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கம், கிளிநொச்சி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், நில அளவை அத்தியட்சகர், வட்டக்கச்சி கிராம சேவை அலுவலர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

306

## பணமே பாசம்



பூம்புகாரில் புவனேசுவரன் என்ற கோடீஸ்வரன் இருந்தான். அவனது வீட்டில் அவனது மகன்களும் மகள்களும் பேரன்களும் பேர்த்திகளும் அக்கா, தங்கைகள், மாமன், மைத்துனன், மாமனார், மாமியார் என்பவர்களோடு மற்றும் பல உறவினர்களும் இருந்து உண்டு, உறங்கிக் காலங்கழித்து வந்தார்கள். அவர்கள் அவனை மகாராஜா என்றும் தர்மப்பிரபு என்றும் புகழவே அவனும் அதனால் உச்சி குளிர்ந்துபோய் அவர்களை தன்வீட்டில் இருக்க விட்டு வைத்தான்.

இதனால் புவனேசுவரனை தாராளமனம் படைத்தவன் எண்ணிவிடவேண்டாம். எச்சில் கையால்கூட காக்கையை விரட்டாத மகா கஞ்சன் அவன். தானம், தர்மம் என்று எதையும் செய்ததும் இல்லை. கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்ததோ அங்குள்ள உண்டியலில் காசு போட்டது என்பதோ அவன் வாழ்வில் நடந்ததேயில்லை.

ஒருநாள் ஒரு சாது அவன் வீட்டு வாசலில் நின்று ஐயா என்று குரல் கொடுத்தான்.

### அம்புலிமாமா கதைகள்

புவனேசுவரன் ஓடிவந்து வாசல் நிலைப்படியில் நின்று போ போ சாதுவேடத்தில் வரும் திருடன் நீ. மரியாதையாகப் போய்விடு என்று கத்தினான். சாதுவோ மகனே! நான் சொல்வதைக்கொஞ்சம் கேள் என்றான்.

அவனோ நீ எதுவும் சொல்ல வேண்டாம். நான் கேட்கவும் மாட்டேன் என்று கூறி வாசல் கதவை மூடித் தாளிடலானான். சாதுவோ வெளியே வந்து நான் சொல்வதைக்கேட்கும் வரை நான் இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன் என்று கூறி வாசல் கதவின் பக்கத்தி லேயே உட்கார்ந்து விட்டார். அதைக்கேட்ட புவனேசுவரன் வாசல் கதவையே திறக்கவில்லை. அன்று கொல்லைப்புறக் கதவைத் திறந்து அதன் வழியாகவே போய் வந்தான். அன்றைய இரவு



கழிந்தது. மறுநாள் காலை அவன் கொல்லைக் கதவை திறந்தபொழுது அங்கு தன் வீட்டிற்கு முன்தினம் வந்த சாது உட்கார்ந்திருப் பதைக்கண்டு திகைத்துப் போனான்.

சாதுவோ சிரித்துக் கொண்டே மகனே! நான் ஒரு முக்கியமான விடயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்றார்.

புவனேசுவரனும் நீ என்னை விடமாட்டாய் போலிருக்கிறதே. சரி சொல்லித்தொலை. இந்தக்காதில் கேட்டு அந்தக் காது வழியாக விட்டுவிடுகிறேன் என்றான்.


சாதுவோ இது அப்படிப் பட்ட அற்ப விடயமல்ல. உன் வீட்டில் உனக்கு வேண்டியவர்கள் என்று யாருமேயில்லை தெரிந்ததா? என்றார். அவனோ இதைச் சொல்லத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டாயா? இங்கே என்னை எல்லோரும் மகாராஜா என்றும் தர்மப்பிரபு என்றும் புகழ்ந்து கூறுகிறார்கள் எனக்காகத் தம் உயிரையும்கூட கொடுக்கத்தயாராக இருக்கிறார்கள் என்றான்.

சாதுவோ அப்படி யாருமே உன் வீட்டில் இல்லை. அவர்கள் உன்னை ஒன்றும் விரும்பவில்லை. உன் பணத்தைத்தான் விரும்புகிறார்கள். வேண்டுமானால் நான் சொல்கிறபடி பரீட்சித்துப்பார். அப்போது உண்மை தெரிந்துவிடும் என்றார்.

புவனேசுவரனும் சற்றுப் பணிந்து போய் அப்படியா சொல்கிறீர்கள் சுவாமி? நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள். அதைச் செய்கிறேன். எனவே சாதுவும் அவன் செய்யவேண்டியதை கூறிவிட்டு சென்றார்.

அதன்பின் அவன் தன் மனைவியிடம் எனக்குத் தலை சுற்றுகிறது எனக்கூறி தடாலென்று படுக்கையில் விழுந்தான். அவனது மனைவி கவலைப்பட்டு அவனைச் சரியாக படுக்கவைத்தாள்.

சற்று நேரத்தி ற்குப் பின் அவன் என் நெஞ்சு வலிக்கிறதே! எனவே அவள் உடனே வைத்தியரை வரவழைத்தாள். அவரும் வந்து பார்த்து விட்டு இது ஏதோ புது நோயாக இருக்கிறதே. எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள். தேவைப்



பட்டால் எனக்கு ஆள் அனுப்புங்கள் என்று கூறி ஏதோ மருந்தைக் கொடுத்து விட்டு சென்றார்.

அவர் போன சற்று நேரத்திற்கெல்லாம் புவனேசுவரன் தன் உடலைக் கட்டைபோல விறைக்கவைத்து மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவன்போல படுத்துக்கிடந்தான்.

உடனே அவனது உறவினர்கள் எல்லோரும் அவனது உடலைச்சுற்றி இருந்து ஒப்பாரி வைக்கலானார்கள். அப்போது சாது ஒரு சிறு குவளையுடன் அங்கு வந்து ஏன் இப்படி அழுகிறீர்கள். யாராவது இறந்து போய்விட்டார் களா? என்று கேட்டார். புவனேசுவரனின் மனைவியும் ஆம், என் கணவர்தான் இறந்து விட்டார். அவருக்கு எப்படி யாவது உயிர்கொடுத்துப் பிழைக்க வையுங்கள் என்று கெஞ்சிக் கண்ணீர் விட்டு கதறினாள்.

சாதுவும் போன உயிர் திரும்பவராது. ஆனால் உயிர் பிழைத்து எழ ஒரு வழியிருக்கிறது. என்னிடம் ஒரு கசாயம் உள்ளது. அதை உங்களில் யாராவது ஒருவர் குடித்தால் அவரது உயிர் இறந்தவரின் உடலில் புகும். அப்போது இவர் உயிர் பிழைத்து எழுந்து விடுவார். ஆனால் இந்தக் கசாயத்தைக் குடித்தவர் இறந்துவிடுவார். இதைக்குடிக்க யார் முன் வருகிறீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு புவனேசுவரனின் மனைவி ஐயோ, கசாயத்தைக் குடித்து நான் இறப்பதா? இது என்னால் முடியாது! என்று கூறினாள். ஏனைய உறவினர்களில் எவரும் கசாயத்தைக் குடிக்கத் தயாராகவில்லை.

அப்போது சாது யாருமே தன்னுயிரைக் கொடுக்கத் தயாராகவில்லை. இது தெரிந்ததா? என உரக்கச் சொல்லவே படுத்திருந்த புவனேசுவரன் எழுந்து நின்றான்.

அந்த நிமிடமே புவனேசுவரன் தன் உறவினர்களை எல்லாம் வீட்டை விட்டு வெளியேற்றினான். அதன்பின் சாதுவின் அறிவுரைப்படி தானதர்மங்களைச் செய்து நல்லவிதமாக வாழ்ந்து வந்தான்.

உலகில் பாசம் என பலர் பணத்தை அடையவே காட்டுகிறார்கள் என்பது அவன் மனதில் நன்கு பதிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MAYA CALENDAR

## மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு

# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!

**-ராஜ்சிவா-** **09**


**பூமியை மோதுமா புதியகோள்? (கல் என்று நாம் பேசிக்கொள்வது)**

நவீன விஞ்ஞானிகளால் ப்ளானெட் எக்ஸ் என்று பெயரிடப்பட்டதும் ஆதிகால மனிதர்களால் நிபிரு என்று பெயரிடப்பட்டதுமான- பூமியில் வாழும் அனைவரும் எமனாக கருதும் கருஞ்சிவப்புக் கோள் பற்றிப் பார்ப்போம்.. இந்தக்கோள்(கல்) பூமியை 21.12.2012 அன்று தாக்குமா? என்பதுதான் இன்று உலகத்தவரிடம் உள்ள பெரும் கேள்வி.

நாசா அனுப்பிய தொலைநோக்கிக் கருவி எமது சூரியக்குடும்பத்தின் எல்லைக்கு அருகே பூமியைவிட மிகப்பெரிதாக ஒரு கோளைக் கண்டுபிடித்தது. இதுவரை இப்படிப்பல கோள்கள் விண்வெளியில் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் இந்தக்கோள் ஒரு விசேடமானதாகக் காணப்பட்டது. காரணம் இந்தக் கோள் நகர்ந்து வரும்பாதை சூரியக் குடும்பத்தை நோக்கியதாகும். குறிப்பாக பூமியை நோக்கிய நகர்வாகவும் இருந்ததுதான். பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்துக் கோள்களும் நட்சத்திரங்களும் வேறு ஒரு கோளையோ நட்சத்திரத்தையோ, நட்சத்திர மண்டலத்தையோ மையாமாக, வைத்தோ சுற்றுகின்றன. காரணம் அவைகளுக்கிடையே உள்ள ஈர்ப்புவிசை. இந்த ஈர்ப்பு விசை அவற்றை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து இயங்கவைத்துக் கொண்டிருக்கும். அப்படி இருக்கும் போது நாசா அனுப்பிய தொலைநோக்கிக் கருவி கண்டுபிடித்த அந்தக்கோள் எப்படி சூரியனை நோக்கி நகர முடியும் எனப்பார்த்தபோது, கிடைத்தது ஒரு ஆச்சரியமான பதில்.

பிளானெற் எக்ஸ் எனும் இந்தக்கோள் சூரியனின் ஈர்ப்புவிசையில் சூரியனையே சுற்றி வருகிறது என்பதும் சூரியனைச் சுற்றி வரும் ஒன்பதாவது கோளாக அது இருக்கிறதும் என்பதுதான் ஆச்சரியப்படத்தக்க அந்த விடயம். (புளுட்டோவை கோள் என்று எடுத்துக் கொள்ளவில்லை) இப்படி ஒரு கோள், சூரியனைச்சுற்றுகின்றது என்ற சந்தேகம் ஏற்கனவே விஞ்ஞானிகளுக்கு இருந்திருக்கிறது. ஆனாலும் அதற்கு ஆதாரம் இல்லாமலேயே இருந்தது. இன்று அது உண்மையாகியிருக்கிறது.


பிளானெற் எக்ஸ் என்பது சூரியனை ஏனைய கோள்கள் சுற்றுவதுபோல இல்லாமல் வித்தியாசமான ஒரு நீள்வட்டத்தில் சுற்றுவது என்பதை படத்திலிருந்து நீங்கள் அவதானிக்கலாம்.




இரு சூரியன்களை சுற்றும் நிபிருவின் நீள்வட்ட சுற்றுப்பாதை

இதற்குக் காரணம் உண்டு. எமது அண்ட வெளியில் இருக்கும் அனேகமான நட்சத்திரங்கள் இரட்டை நட்சத்திரங்களாகவே இருக்கின்றன. இப்படி இருக்கும இரட்டை நட்சத்திரங்கள் தம்மைச் சுற்றிக்கொள்ள தமக்கெனக்கோள்களைத் தனித்தனியே கொண்டிருந்தாலும் அவை இரண்டையும் சேர்த்து பொதுவாகச் சுற்றும் கோள்களையும் கொண்டிருக்கும். சில இரட்டை நட்சத்திரங்கள் தாமே ஒன்றையொன்றும் சுற்றிக்கொள்ளும். எமது சூரியனுக்கு அடுத்ததாக அண்மையில் இருக்கும் நட்சத்திரமான அல்பா சென்டாரி எனும் நட்சத்திரம்கூட முன்னர், ஒரேயொரு நட்சத்திரம் என்றுதான் நினைத்திருந்தனர். ஆனால், அது அல்பா சென்டாரி-ஏ, அல்பாசென்டாரி-பி என்று இரட்டை நட்சத்திரங்கள் அருகருகே இருந்த தால் ஒரு நட்சத்திரம் போல இருந்தது.

இந்த அல்பா சென்டாரிபோல் எங்கள் சூரியனுக்கும் இன்னுமொரு இரட்டைச் சூரியன் உண்டு என்றும் அவை இரண்டையும் சுற்றும் ஒரு கோளாகத்தான் இந்தப் பிளானெற் எக்ஸ் இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். (இங்கு சூரியனும் ஒரு நட்சத்திரம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது) இதன்படி பிளானெற் எக்ஸ் மிகவும் வித்தியாசமான ஒரு நீள் வட்டத்தில் இரண்டு சூரியன்களையும் சுற்றுகிறது.




இன்றைய நிலையில் அதாவது 2012 டிசெம்பர் 21 ஆம் திகதிக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் பிளானெற் எக்ஸ் எனும்கோள் பூமியிலிருந்து 5.8 அஸ்றோனமிக்கல் யுனிற் தூரத்தில் இருக்கிறது. (ஒரு அஸ்றோனமிக்கல் யுனிற்= 149, 598, 000 கிலோமீற்றர்கள் ஆகும்) அதன் சுற்றும் வேகத்தில் 6 மாதங்களில் பூமியிலிருந்து 2.9 அஸ்.யுனிற் தூரத்தில் இருக்கும். 3 மாதங்களில் 1.7 அஸ்.யுனிற், ஒருமாதத்தில் 0.64 அஸ்.யுனிற் என்று மிக அண்மிக்கும். 20.12.2012 இல் 0.024 அஸ்.யுனிற் தூரத்தில் பிளானெற் எக்ஸ் இருக்கும். அதாவது 3.5 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும். இது அண்ணளவாக பூமிக்கு மிக அண்மையில் இருக்கும்செவ்வாய்க்கிரகத்தின் தூரத்தின் அரைவாசித் தூரம். இப்போது இந்தக்கோள் இருக்கும் நிலையில், சாதாரண தொலைநோக்கிகளால் இது எமக்குத் தெரிவதற்கு சாத்தியமில்லாத தூரத்தில் இருப்பதாகவே பலர் கருதுகிறார்கள். ஒரு நட்சத்திரம் என்றால், அதன் ஒளியை வைத்துக் கண்டுபிடி பது சிரமமில்லை. ஆனால், ஒரு கோளை அண்டத்தின் இருட்டில் கண்டு பிடிப்பது அவ்வளவு சாதாரண விடயமல்ல. ஆனாலும் நாசா அதைக் கண்டிருக்கலாம் என்ற சந்தேகம் பலமாக இருக்கிறது. எவ்வளவு காரணம் கேட்டாலும் நாசா அப்படி ஒரு கோளை தாங்கள் கண்டு பிடிக்கவே இல்லையென்று கூறுகிறது.


இந்தக்கோள் பற்றிய இரகசியத்தை நாசா மறைத்துவைத்திருக்கிறது என்று அமெரிக்க பத்திரிகைகளான நியூயோர்க் ரைம்ஸ், த வாசிங்டன் போஸ்ற் ஆகியனகூட வெளிப்படையாகப் போட்டு டைத்தன.

நாசா கண்டுபிடித்த அந்தக்கோளுக்கு ஆராய்ச்சியாளர்கள் பிளானெற் எக்ஸ் என்று பெயர் கொடுத்தாலும் 6 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் மொசப்பதேமியாவில் வாழ்ந்த சுமேரியர்கள் அதற்கு நிபிரு என்று பெயரிட்டிருந்தனர். மொசப்பதேமியா என்பது ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையே அமைந்திருந்த ஒரு பண்டைய நிலப்பகுதியாகும்.




மாயன்களின் கடவுளாகிய குக்கிள்கான், மாயன்களின் அரசானாகவோ, அவர்களைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கவில்லை. அவரது தோற்றம், மாயன்களைப்போல கறுத்த நிறமும் கறுத்த தலை முடியும் கொண்டதாக இருக்கவில்லை. மாறாக வெள்ளை நிறத்தவராகவும் நீலக்கண்களை உடையவராகவும் வெள்ளைத் தலைமுடி யைக் கொண்டவராகவும் அவரது தலை, பின்பக்கம் நீண்டதாகவும் இருந்திருக்கிறது. இவர் சுமேரிய இனத்தவர் என்று பின்பு தெரியவந்தது.

மயான்களின் பதிவின்படி குக்கிள்கான் மாயன்களுடன் இருந்து வாழ்ந்து, பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து விடைபெற்றுச் சென்றிருக்கிறார். அப்படிச்செல்ல முடிவெடுத்த குக்கிள்கான் கடல் வழியாகவே கிழக்கு நோக்கிச் சென்றிருக்கிறார். அத்துடன் அவர் தனது சொந்த இடத்திற்கச் செல்வதாகச் சொல்லியும் விடை பெற்றிருக்கிறார். சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை. அதன் பின்னரே மாயன்களின் அழிவும் ஆரம்பித்திருக்கிறது. அவர் சென்ற இடம் சுமேரியாவாகும். அவருடைய சொந்த இடமும் அதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும்.



மாயன்களின் கடவுள் குக்கிள்கான்

**மாயன்களின் சரித்திரம் 4000 ஆண்டுகள் கொண்ட வரலாறாகவே எமக்குக் கிடைத் திருக்கின்றன. ஆனால் சுமேரியரின் வரலாறோ 10,000 வருடங்களுக்கு முந்தையது. உலக நாகரிகங்களிலேயே மிகவும் தொன்மையான நாகரீகம் சுமேரிய நாகரீகமாகத்தான் இருந்திருக்கின்றது.**

எம்மை வியக்கவைக்கும் அறிவுடன் -ஆச்சரியப்படுத்திய மாயனுக்கே அந்த அளவுக்கு அறிவைப் புகுத்தியது குக்கிள்கான் என்ற ஒரு சுமேரியர் என்றால், அந்தச் சுமேரியர்கள் எவ்வளவு அறிவுடன் இருந்திருக்க வேண்டும்? 6000 ஆண்டுகளுக்கு முன்னரே அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய அனைத்திலும் சுமேரியர் சிறந்து விளங்கி இருக்கிறார்கள் என்பதற்கு பல தொல்லியல் ஆதாரங்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. மாயன்கள் வைத்திருந்த கிறிஸ்டல் மண்டையோடுகள் கூட சுமேரியாவிலிருந்து தான் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்றால் நீங்களே சுமேரியன் பற்றிய ஒரு முடிவுக்கு வாருங்கள்.

மாயன்களுடன் தொடர்புபட்ட சுமேரியர்களின் தகவல்களை மட்டும் இங்கு கவனிப்போம். சுமேரியர்களின் அரசர், வேறு சிலருடன் உரையாடும் காட்சி உள்ள ஒரு சுவர் ஓவியம் அகழ்வாராச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தச் சுவரோவியம் மிகச் சாதாரணமாகவே முதலில் பார்க்கப்பட்டது. ஆனால், தற்செயலாக அதில் ஒரு இடத்தில் வடிவமைக்கப்பட்ட சூரியக்குடும்பத்தின் படத்தைப் பார்த்தபோதுதான் ஆச்சரியம் தோன்றியது.

> **"2012 டிசெம்பர் 22 இல் உலகம் அழியுமா என என்னைத் தனிப்பட்ட முறையில் நீங்கள் கேட்பீர்களானால், நான் 2012, 23 ஆம் திகதி உங்களுடன் தேநீர் அருந்தத் தயாராக இருக்கிறேன் என்றுதான் சொல்வேன்"**
>
> *-ராஜ்சிவா*

அந்த ஓவியத்தில் எமது சூரியன் மையத்திலிருக்க அதைச் சுற்றி சூரியக்குடும்பத்தின் அனைத்துக் கோள்களும் அதனதன் வரிசையில் வரையப்பட்டிருந்தது. அதுமட்டுமில்லாமல் அந்தக் கோள்களின் அளவுகள்கூட கொஞ்சமும் பிசகாமல் வடிவமைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் நவீன விஞ்ஞானமே நெப்டியூன், புளூட்டோ ஆகியவற்றை சமீபமாகக் கண்டுபிடித்த வேளையில் சுமேரியர்கள் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவற்றை மிகச் சரியாகக் கண்டுபிடித்திருந்தனர். இது எப்படிச் சாத்தியம்? நம்பவே முடியாத ஆச்சரியம் அல்லவா ? அதுவும் வெற்றுக் கண்களால் பார்த்துக் கணிப்பது என்பது சாத்தியமே இல்லாத ஒன்று.

சுமேரியர்களின் ஓவியத்தில் மேலும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. இந்தப் பதிவுக்குக் காரணமே அந்த ஆச்சரியம்தான். அது என்ன தெரியுமா? பிளானெட் எக்ஸ் அல்லது நிபிரு என்று சொல்லப்பட்ட நாஸா கண்டு பிடித்த அந்தக் கோளும் அதில் காணப்பட்டது.



கிரகநிலைகளை உள்ளடக்கிய சுமேரியர்களின் சுவரோவியம்

நுணுக்கமாக அமைந்த அவ்வோவியத்தில் சூரியனை மொத்தமாக பதினொரு கோள்கள் சுற்றுவதாக வரையப்பட்டிருந்தது. அது எப்படி பதினொரு கோள்கள் வரும் எனப் புரியாமல் தவித்தனர் ஆராய்ச்சியாளர்கள். இவ்வளவு நுணுக்கமாக சூரியன், வியாழன், சனி, பூமி, செவ்வாய் என அனைத் துக் கிரகங்களையும் அளவு கணக்கில் மிகச் சரியாக கணித்த சுமேரியர்கள் இப்படி ஒரு மாபெரும் தவறை விட்டிருப்பார்களா? பின்னர் சுமேரியர்களின் சித்திர எழுத்துக்களையும் கல்வெட்டுக்களையும் படித்தபோது தான் அதற்கு விடை கிடைத்தது. அதன்படி அவர்கள் சுவரில் வரைந்திருக்கும் பதினோராவது கோளை நிபிரு எனச் சொல்லியிருக்கிறார்கள். சுமேரியன் மொழியில் நிபிரு என்றால் இடைவெட்டும் கோள் என்று அர்த்தம். எப்படி இப்படி ஒரு அர்த்தம் வரும் வகையில் அவர்கள் பெயரிட்டிருக்க முடியும்? ஆச்சரியமாக இல்லையா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# கர்நாடக சங்கீதம்

### பகுதி 1

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருக.**

1. தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு
(1) சமம் (2) அதீதம் (3) அனாகதம் (4) நாதம்

2. "சங்கீத பிதாமகர்" எனப் போற்றப்படுபவர்
(1) புரந்தரதாசர் (2) தியாகராஜ சுவாமிகள்
(3) முத்துத்தாண்டவர் (4) அருணாசலக்கவிராயர்

3. இராகமாளிகை என்ற உருப்படியில் குறைந்தது இருக்க வேண்டிய இராகங்கள்
(1) 5 (2) 4 (3) 2 (4) 3

4. "பண்ணும் பதம்" என்ற தேவாரத்தின் பண்
(1) குறிஞ்சி (2) முல்லை (3) இந்தளம் (4) நட்டபாடை

5. சக்கரவாகம் என்ற இராகத்தின் மேள எண்
(1) 15 (2) 19 (3) 16 (4) 28

6. அப்பியாச கானத்துக்கும் சபாகானத்துக்கும் பொதுவான உருப்படி
(1) வர்ணம் (2) கீதம் (3) கீர்த்தனை (4) தில்லானா

7. பந்துவராளி இராகத்தின் புராதன பெயர்
(1) ஹனுமதோடி (2) சீகாமரம்
(3) காமவர்த்தனி (4) தீரசங்கராபரணம்

8. தியாகராஜ சுவாமிகள் பிறந்த ஆண்டு
(1) 1840 (2) 1767 (3) 1785 (4) 1740

9. தாளத்தந்திகள் காணப்படும் வாத்தியம்
(1) தவில் (2) வீணை (3) வயலின் (4) தம்புரா

10. சுவாதித்திருநாள் மஹாராஜாவால் இயற்றப்பட்ட உருப்படி
(1) இந்த இன்பம் (2) மயில்வாகன (3) தேவதேவ (4) அலைபாயுதே

ஸமகரி | ஸரி | கம ||
ரிப மக | ரிக | மப ||

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அப்பியாச வரிசை
(1) ஸ்வர வரிசை (2) ஜண்ட வரிசை
(3) தாட்டு வரிசை (4) மேல்ஸ்தாயி வரிசை

12. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அப்பியாச வரிசையின் இராகம்
(1) ஆரபி (2) மாயாமாளவகௌளை
(3) மோகனம் (4) பிலகரி


13. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அப்பியாச வரிசைக்குரிய இராகத்தின் ஆரோகண அவரோகணம்
(1) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ (2) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ (3) ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ (4) ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ

14. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அப்பியாச வரிசையை 2ஆம் காலமாகப் பாடும்போது ஒரு ஆவர்த்தனம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரங்கள்
(1) 10 (2) 16 (3) 8 (4) 4

15. கமகத்திற்கான குறியீடு
(1) ✹ (2) || (3) ∿∿∿ (4) ∪

16. கன பஞ்சக இராகங்களில் ஒன்று
(1) தோடி (2) ஆரபி
(3) கல்யாணி (4) மாயாமாளவகௌளை

17. ஸ்வரப் பெயர்களின் எண்ணிக்கை
(1) 16 (2) 7 (3) 12 (4) 5




18. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாகம் காணப்படும் வாத்தியம்
(1) தவில் (2) தபேலா (3) மிருதங்கம் (4) கெஞ்சீரா

19. இப்படத்தில் இல 8 எனக் குறிக்கும் பகுதி
(1) தோல்வார் (2) வளையம் (3) கரணை (4) சாப்புத்தோல்

20. இசைக்கருவிகளில் இவ்வாத்தியம் குறிக்கும் பிரிவு
(1) நரம்புக்கருவி (2) தோற்கருவி
(3) கஞ்சக்கருவி (4) துளைக்கருவி

21. இவ்வாத்தியத்தில் பிரசித்தி பெற்ற கலைஞர்
(1) லால்குடி ஜெயராமன் (2) சிட்டிபாபு
(3) பாலக்காடு மணிஜயர் (4) மகாலிங்கம்

22. ஹரிகாம்போஜி இராகத்தின் பண்
(1) இந்தளம் (2) முல்லை (3) குறிஞ்சி (4) செந்துருத்தி

23. பிலகரி இராகத்தில் வரும் அந்நிய ஸ்வரம்
(1) காகலி நிஷாதம் (2) கைசிகி நிஷாதம்
(3) சுத்ததைவதம் (4) சுத்தரிஷபம்

24. வலங்கைமான் சண்முக சுந்தரம் அவர்களால் கையாளப்பட்ட வாத்தியம்
(1) தவில் (2) நாதஸ்வரம் (3) புல்லாங்குழல் (4) வீணை

25. "பூர்த்தேந்தாயன" என்றதேவாரத்தை அருளியவர்
(1) அப்பர் (2) சுந்தரர் (3) சம்பந்தர் (4) மாணிக்கவாசகர்

26. கமாஸ் இராகத்தில் அமைந்த உருப்படி
(1) ஏழுமலை மேல் (2) தெருவில் வாரானோ
(3) கபாலி (4) அலைபாயுதே

27. "f"வடிவத்துளைகள் காணப்படும் வாத்தியம்
(1) மிருதங்கம் (2) வயலின் (3) புல்லாங்குழல் (4) நாதஸ்வரம்

28. சியாமாசாஸ்திரிகளின் சொத்து எனப்படும் இராகம்
(1) மோகனம் (2) தோடி (3) ஆனந்தபைரவி (4) கல்யாணி

29. "தகதிமி தகதகிட" என்ற சொற்கட்டைக் கொண்ட ஜதி
(1) திஸ்ரஜதி (2) மிஸ்ரஜதி (3) கண்டஜதி (4) சங்கீர்ணஜதி

**பின்வரும் ஆரோகண அவரோகணங்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.(30 - 34)**

- ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ
- ஸரிகமபதநிஸ ஸ்நிதபமகரிஸ
- ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ
- ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ
- ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ

30. முல்லைப் பண்ணுக்குரிய ஆரோகண அவரோகணம்
(1) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ (2) ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ (3) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ (4) ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ

31. கச்சேரியின் இறுதியில் பாடப்படும் இராகத்தின் பண்
(1) குறிஞ்சி (2) முல்லை (3) செந்துருத்தி (4) இந்தளம்

32. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் துர்க்கா எனப்படும் இராகத்தின் ஆரோகண அவரோகணம்
(1) ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ (2) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ (3) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ (4) ஸரிகமபத்நிஸ் ஸ்நிதபமகரிஸ

33. வெண்பா பாடப்படும் இராகத்துக்குரிய ஆரோகண அவரோகணம்
(1) ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ (2) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ (3) ஸரிமபதஸ் ஸ்நிதப்மகரிஸ (4) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ

34. ஔடவ சம்பூர்ணத்துக்குரிய இராகம்
(1) மாயாமாளவகௌளை (2) மோகனம்
(3) மத்தியமாவதி (4) ஆரபி

35. வேங்கடமகியால் எழுதப்பட்ட நூல்
(1) சதுர்தண்டிப் பிரகாசிகை (2) சங்கிரக சூடாமணி
(3) திருப்புகழ் (4) அசோமுகி நாடகம்

36. 12 சக்கரங்களில் 6ஆவது சக்கரம்
(1) ருது (2) ரிஷி (3) பாண (4) இந்து

37. அசல ஸ்வரம் எனப்படுவது
(1) ரிகமதநி (2) ஸப (3) கமபநிதி (4) ஸரிகமபதநி

38. ஷடங்கத்தில் வரும் அங்கங்களின் எண்ணிக்கை
(1) 5 (2) 4 (3) 9 (4) 6

39. தாலாட்டுப் பாடல் பாடப்படும் இராகம்
(1) சங்கரா பரணம் (2) மத்தியமாவதி (3) நீலாம்பரி (4) ஆரபி

40. 10 அட்சரங்களை எடுத்துக் கொள்ளும் தாளம்
(1) திஸ்ரஜாதி ரூபகம் (2) கண்டஜாதி மட்டியம்
(3) சதுஸ்ரஜாதிஜம்பை (4) திஸ்ரஜாதி அடதாளம்

### பகுதி 2

**பின்வரும் வினாக்களில் முதலாம் வினா கட்டாயமாகவும் ஏனைய வினாக்களில் 4 வினாக்களுக்கும் விடை தருக.**

1. அ. விக்ருதி ஸ்வரங்களின் இரு பேதங்களும் எவை?
ஆ. வர்ணத்தின் இரு வகைகளும் எவை?
இ. யோகிகளால் உணரப்படும் நாதம் யாது?
ஈ. மங்களகரமான தோற்கருவி யாது?
உ. "தரானா" என அழைக்கப்படும் உருப்படி யாது?
ஊ. ஆனந்தாம்ருத வர்சினி என்ற கிருதியை பாடி மழை வரச் செய்த வாக்கேயகாரர் யார்?
எ. எல்லா ஸ்வரங்களும் தீவிரஸ்வரமாக வரும் இராகம் யாது?
ஏ. பல வாத்தியங்கள் சேர்த்து இசைக்கப்படும் நிகழ்ச்சி யாது?
ஐ. ஷேத்ரக்ஞரால் இயற்றப்பட்ட உருப்படி வகை யாது?

2. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.
(1) பண்சாதரி எனப்படும் இராகம்
(2) ஆரபி
(3) பெரிய புராணம் பாடப்படும் இராகம்

3. பின்வரும் உருப்படிகளில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.
(1) கீர்த்தனை (2) தில்லானா (3) ஸ்வரஜதி


4. அ. நாட்டியக் கச்சேரிகளில் முக்கியமாக இடம்பெறும் தாளவாத்தியம் யாது?
ஆ. அக்கருவியின் படத்தை வரைந்து பாகங்களைக் குறிக்குக.
இ. அவ்வாத்தியத்தின் அமைப்பையும் சுருதி சேர்க்கும் முறைமையும் எழுதுக.
ஈ. அவ்வாத்தியத்தில் பிரபல்யமான இரு கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

5. அ. 12 சக்கரங்களில் 3 ஆவது சக்கரம் யாது?
ஆ. அச்சக்கரத்தில் இடம்பெறும் மேள இலக்கங்களைத் தருக?
இ. அதில் வரும் இராகங்களின் பெயர்களைத் தருக?
ஈ. அந்த இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைத் தருக?

6. பின்வரும் பதங்களை உதாரணத்துடன் விளக்குக.
(1) சபாகானம் (2) ஆவர்த்தனம் (3) நிபந்தம்

7. (அ) பஞ்சரத்தினக் கீர்த்தனையை இயற்றிய வாக்கேயகாரர் யார்?
(ஆ) அவ்வாக்கேயகாரரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் தருக?
(இ) அவ்வாக்கேயகாரர் இயற்றிய 2 உருப்படிகள் தருக?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி இராஜராஜேஸ்வரி மாணவனொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






தொழில்திணைக்களத்தின் யாழ். மாவட்ட தொழில் காரியாலயம் மற்றும் பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகம் அண்மையில் சிவன் பண்ணை வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன், உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் சுவாமிபடங்கள் ஆலயத்திலிருந்து எடுத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம்.



வடமாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்பக்கல்வி பிரிவினரால் நடத்தப்பட்ட முன்பள்ளி சிறார்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினமும் நேற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி நாடாவெட்டி கண்காட்சியை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

## நிகழ்வின் நிழல்கள்







திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்ட கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரை உரையாற்றுவதையும் மாணவிகளின் வயலின் இசை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.



வவுனியா மாவட்ட கலாசார விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.தட்சாயினி உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பூந்தோட்ட செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையினுள் யுத்தத்தின்போது ஐ.நா.அதிகாரியின் இறுதிநாட்கள்

**கிளிநொச்சியில் இறுதியாக ஐ.நா. அதிகாரியாக பணியாற்றிய பென்ஜ மின் டிக்ஸ், *றிஃவ்லெக்சன் ஓஃப் த றிப்பிளிங் இஃபெக்ற் ஓஃப் கொன்ஃபிளிக்ற் ஒன் ஏ சிறிலங்கன் ஃபமிலி* என்ற பெயரில் இலங்கை யுத்தத்தின் தாக்கங்களை வெளிப் படுத்தும் ஓவிய நாவல் ஒன்றை வெளியிட வுள்ளார். அதுபற்றிய அவரது குறிப்பு.**

2008 செப்ரெம்பர் 12 ஆம் நாள் விடுதலைப்புலிகளின் நிர்வாகத் தலை மையகமான கிளிநொச்சியில் இருந்து நாம் வெளியேற வேண்டும் என்று நான் கேட்கப்பட்டிருந்தேன்.

இலங்கை இராணுவம் தெற்கே சில கிலோமீற்றர் தொலைவில் இருந்து ஏற்கனவே நகரின்மீது எறிகணை களை வீசியபோது ஐ.நா.வளாகமும் தாக்கப்பட்டது. எனது ஐ.நா பணிய கத்திலிருந்து ஒரு கிலோமீற்றர்



தொலைவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின்போது குண்டுச் சிதறல் கள் எமது முற்றத்தில் மழையாகக் கொட்டின.

நாம் வெளியேறப் போகிறோம் என்ற செய்தி வெளியானதை அடுத்து நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொது மக்கள் எமது பணியகத்திற்கு வெளியே எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி எம்மை வெளியேற வேண்டாம் என்று கோரினர். 20 ஆண்டு மோதல்களுக்குப் பின்னர் அனைத்துலக முகவர் அமைப்புகள் அதிகாரிகளின் பிரசன்னம் அந்தப் பிரதேசத்தில் இல்லாமல், இலங்கை இராணுவம் கடும் பலத்துடன் முன்னேறும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால், அது இந்தளவுக்குக் கடு மையானதாக இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

தமது பணிகளைத் தொடர்ந்து மேற் கொள்வதற்காக அனைத்துலக செஞ் சிலுவைக்குழு வன்னிக்குள் வடக்கே மேலும் நகர்ந்தது. நாம் (ஐ.நா) வெளியேறத் தயாரானோம்.

வன்னியில் கிட்டத்தட்ட 4 ஆண்டு கள் நான் பணியாற்றியிருந்தேன். எமது பணியாளர்கள் மற்றும் சமூ கத்தில் பல நண்பர்களைப் பெற்றிருந் தேன்.

ஐ.நா. பணியாளர்களில், தங்கி யிருப்போர் உள்ளிட்ட வன்னப்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறு வதற்கு விடுதலைப்புலிகள் மிகவும் இறுக்கமான அனுமதி வழங்கும் நடைமுறையை வைத்திருந்தனர்.

நாம் மக்களை விட்டுவிட்டு வெளியேறப்போவதால், மிகுந்த துன்பத்துடன் உணர்ச்சிமயமான சூழலில் அவர்களிடம் விடைபெறத் தொடங்கினேன்.

நான் அடிக்கடி சென்ற ஒரே குடும்பம் அது. அவர்களை எனக்கு மூன்று ஆண்டுகளாகத் தெரியும். அவர்களின் திருமணத்தில் பங்கேற்று அவர்களின் மகள் பிறந்தபோது. அவர்களின் வீட்டுத்தோட்டத்தில் உள்ள மாமரத்தின் கீழிருந்து சுவை யான உணவை சாப்பிட்டதுவரை - எனது நெருக்கமான நண்பர்களாக இருந்தனர்.

அவர்கள் என்னை தம்பி என்றே அழைத்தனர். குடும்ப உறுப்பினரா கவே பழகினர்.

வெளியேறுவதற்கு முதல்நாள், இரவு ஒன்பது மணியளவில் நான் அவர்களின் வீட்டிற்கு சென்றேன்.

தவளைகளின் இரவுநேர இரைச் சல்களை மிஞ்சியபடி அருகிலேயே எறிகணைகள் விழும் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.


அந்தக் குடும்பம் முற்றாக நம்பிக் கையிழந்து போயிருந்ததைக் கண்டேன்.

முந்தைய நாள் நடத்தப்பட்ட விமா னத் தாக்குதலை அடுத்து கணவன் பதற்றத்துடன் அவசியமான பொருட் களை தனது உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டிருந்தார். அவர்களின் 2 வயதுக் குழந்தையுடன் மனைவி பதுங்கு குழியில் மனமின்றிப் பதுங் கியிருந்தார். எமது வெளியேற்றத் துடன் எல்லோரும் அந்த இடத்தை விட்டு வெளியேறினார்கள். எனது நண்பர் என்னைப்பார்த்துக் கேட்டார் உண்மையிலேயே நீங்கள் வெளி யேறுகிறீர்களா? எமக்கு என்ன நடக்கப் போகிறது? அந்தக் குழலில் குழப்பத்தில் இருந்த நான் அவர்களுக்கு சில பதில்களைக் கூறினேன். ஐ.நா. வின் அதிகாரபூர்வமான வரியில் சொல் வதானால், நாம் இடம் மாற்றம் செய் யப்பட்டோம். விரைவில் திரும்பு வோம் என்று கூறுவது. இது, அபத்த மானது. நாம் வெளியேறிய பின்னர் இலங்கை அரசாங்கம் எம்மை மீளத் திரும்ப அனுமதிக்காது. உழவு இயந் திரத்தில் பொருட்களை ஏற்ற அவர் களுக்கு நான் உதவினேன். அங்கே சொல்வதற்கு எதுவுமே இல்லாததால், அமைதியாக இருந்தோம். எனக்கு ஒரு கோப்பை தேநீர் வழங்கப்பட்டது. அமைதியாக அதைக் குடித்தேன்.

**நல்ல அதிர்ஷ்டம், பாதுகாப்பாக இருங்கள். விரைவில் உங்களைப் பார்ப்பேன்** என்பதை விட அவர் களுக்குச் சொல்ல என்னிடம் வார்த் தைகள் இருக்கவில்லை.

அது எனக்கு மோசமானதாகத் தெரிந்தது.

அழகான கொழுப்பு நிறைந்த கன் னங்களை உடைய அந்தச் சிறிய பெண்குழந்தையை இறுக்க கட் டியணைத்துவிட்டு வெளியேறினேன். சில நிமிடங்கள் கழித்து நான் எனது காரை நிறுத்திவிட்டு வீதியின் பக்கம் வெறித்துப்பார்த்தேன். மறுநாள் காலை நாம் எமது வாக னங்களை அணியாக நிறுத் தியிருந்தோம். நாம் வெளி யேறுவதை பல பொது மக்கள் எமது வளாகத் திற்கு வெளியே நின்று பாாத்துக் கொண்டிருந் தனர். எமது வெளியேற் றம் காலை 11:00 மணி யளவில் இடம்பெறுவ தற்கு திட்டமிடப்பட்டி ருந்தது.




காலை 10:45 மணியள வில் இலங்கை விமானப் படை நாம் நின்ற இடத் திலிருந்து 2 கிலோ மீற் றர் தொலைவில் வீதியில் குண்டுகளை வீசியது.

இப்போது விலகலாம் என்ற செய்தியை அது கூறியது. எமது தலைக் கவசம் உடற்கவசம் உள் ளிட்ட எல்லாப்பாதுகாப்பு விதி முறைகளும் வாக னத்தில் இருந்தன.

சேலை அணிந்த, சாரம் அணிந்த குடும்பஸ்தர் களைத் தாண்டி வாக னத்தை செலுத்தினேன். அவர்களைக் கைவிட்டுச் செல்வதான குற்ற உணர் வினால் நான் பாதிக்கப்பட்டேன். பொதுமக்களைப் பாதுகாக்கின்ற கொள்கை இல்லாத ஐ.நா.விலிருந்து என்ன செய்யப்போகிறேன் என்று எனது உள்ளுணர்வு கேள்வி எழுப்பியது.

மறுநாள் ஐ.நா.விலிருந்து நான் பதவி விலகிக்கொண்டேன். தொடர் நிகழ்வுகளால் வெறுப்படைந்து இலங் கையைவிட்டு வெளியேறும் சூழலை ஏற்படுத்தியது.

அடுத்த இரண்டு ஆண்டுகள் வரையறுக்கப்பட்ட ஊடகச் செய்தி கள் மூலம், இலங்கையை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தேன். நண் பர்கள் பலர் இறந்துபோன செய்திகள் கிடைத்தன. 2011 மே மாதம் கிளி நொச்சியில் இருந்த நண்பரின் கண வரின் முகநூலில் இருந்து நட்புக் கான அழைப்பு கிடைத்தது. அவர்கள் எல்லோரும் உயிர் தப்பி இந்தியா சென்றிருந்தார்கள். அதேவேளை அவர்களைப் பார்க்கச் சென்றபோது கணவர் ஏற்கனவே ஐரோப்பா புறப் பட்டுவிட்டார்.

புலம்பெயர் தமிழர்கள் மூலம் சேகரித்த 20 ஆயிரம் டொலரை முகவருக்குக் கொடுத்து, மனைவி மற்றும் மகளை விட்டுவிட்டு புக லிடம் தேடிச்சென்றார். சென்னையில் சேரிப்பகுதியில் உள்ள ஒரு சிறிய கொங்கிறீற் அறையில் நான் எனது பழைய அன்பு நண்பருடன் அமர்ந்தி ருந்தேன்.

வெளியிலுள்ள நீர்த்தேக்கத் தொட் டியிலிருந்து துர்நாற்றம் வந்து கொண் டிருந்தது. இப்போது 5 வயதாகும் அந்தக் குழந்தை என் மடியில் அம ர்ந்து மாமா என்று அழைத்தது. இந்தக் கதையை சொல்ல வேண்டு மென்று நான் புரிந்துகொண்டேன். சிறிய கடற்கரைப் பகுதிக்குள் கடுமை யான குண்டு வீச்சுக்களில் இருந்து இந்தக் குடும்பம் உயிர்பிழைத்தது. இறுதி வாரங்களில் அவர்கள் எது வும் செய்ய முடியாதபோது தற் கொலை செய்துகொள்வது பற்றி சிந்தித்தார்கள். ஐ.நா.வினால் அமைக் கப்பட்ட இலங்கை அரசினால் நடத் தப்படும் பாதுகாப்பு நகரமான முகாம்களில் அவர்கள் 7 மாதங்கள் வாழ்ந்தார்கள். அதன் பின்னர் இந்தி யாவக்குத் தப்பிச்சென்றனர். அவர் இப்போது சென்னையில் தனியாக பாதிக்கப்படக்கூடிய சூழலில் வாழ்கி றார். அவர் தனது கணவன் புலம் பெயர்ந்தநிலையில், அவரைவிட்டு மிகத்தூரத்தில் குழந்தையுடன் தனியாக வாழ்கிறார்.

யுத்தத்தின் நீண்ட கால விளைவாக இதைக் காண்கிறேன். இந்தக் குடும் பமும் இதுபோன்ற ஏனைய குடும் பங்களும் தமது வீடுகளைப் பார்க் கப்போவதில்லை. அவர்கள் அயல் நாடுகளில் நிரந்தரமாகக் குடியேறப் போகிறார்கள். இதுபோன்ற வேறும் கதைகளை உயிர்தப்பி ஐரோப் பாவிலும் இந்தியாவிலும் அடைக் கலம் தேடியுள்ளவர்களிடம் சேகரித் துள்ளேன். எனது நண்பரின் கணவர் இப்போது லண்டனில் இருந்து கொண்டு இலங்கையின்-தனது கடந்தகால வாழ்க்கையை • புகலிட சட்டவாள ரிடம் தெரிவித்து அங்கு தங்குவதற் கான உதவிகளை நாடியிருப்பதுடன் சென்னையிலுள்ள தனது மனைவி, பிள்ளையுடன் ஸ்கைப் வழியாகவும் உரையாடிவருகிறார்.

திரைப்பட இயக்குனர் லன்ட்சே பொலொக்கும் நானும் 2011 இல் இந்தக்கதை ஓவியங்களை வரையத் தொடங்கி இப்போது நூல் வடிவைப் பெற்றுவருகிறது. நவீன போர் முறையின் கொடூரத்தன்மையை மக்கள் இன்னமும் புரிந்துகொள்ள வில்லையென்று நான் நம்புகிறேன். ஆனால், மோதலின் விளைவுகள் ஒரு குடும்பத்தில் அடுத்த பல தலைமுறை களுக்கும் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு இயல்பு நிலைக்கு திரும்புகையில் ஆயரின் கருத்து பொருத்தமற்றது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் அகதிகளாக செல்வோர் திருப்பியனுப்பப்படக் கூடாது. அவ்வாறு திருப்பியனுப்பப்படுவோர் இலங்கையில் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்று மன்னார் ஆயர் அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை அண்மையில் விடுத்திருந்தார். இக்கோரிக்கையை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இருந்து அகதிகளாக செல்வோர் மீண்டும் திருப்பியனுப்பப்படும் போது அவர்களுக்கு பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுவதாக ஆயர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் ஆயரின் கருத்து தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவலை கொள்வதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவோர் உண்மையான அகதிகள் அல்லர். அவர்கள் பொருளாதாரத்தை நோக்காக கொண்டு 'அங்கு செல்பவர்களாவர்.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் ஆயரின் இந்தக் கருத்து பொருத்தமற்றது என்று கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அமைதி காக்கும் படையினரை

# கண்காணிக்கும் பொறுப்பு சவேந்திர சில்வாவிடம்

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினரை கண்காணிக்கும் பொறுப்பு ஐ.நாவிற்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய லெபனானில் முன்னெடுக்கப்பட்டு வரும் அமைதி காக்கும் பணிகளை பார்வையிடும் பொறுப்பு சவேந்திரவிடம் ஒப்பட டக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சவேந்திர தற்போது லெபனானில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# விலகல் கடிதங்கள் சபாநாயகரிடம்

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக செயற்பட்ட ஜோன் அமரதுங்க, லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோரது விலகல் கடிதங்கள், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் குற்றவியல் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொள்ள தமது கட்சி தயாராக இருப்பதாக நாடாளுன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் கையளிக்கப்பட்ட பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தொடர்ந்து இணைந்திருக்க விரும்பாத நிலையிலேயே தாங்கள் 'அதில் இருந்து விலகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிங்களவர்களின் அ.அட்டையில் தமிழ்மொழியும் இடம்பெறும்

## உடன்பாடு என்கிறது மா.கொ. நிலையம்

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையான அட்டையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெறுவது தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையில் இதுவரை தமிழர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையில் மட்டுமே சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் காணப்பட்டன.

ஆனால், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையில் சிங்கள மொழி மட்டுமே காணப்படுகின்றது. இந்நிலையில் இன வேறுபாடு காட்டப்படுவதுடன் மொழி உரிமையும் மீறப்படுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியிருந்தது.

இதனால் குறித்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் இரு மொழிக் கொள்கை நடைமுறைப் படுத்தல் திட்டத்துக்கு அமைவாக இன, மத பேதமின்றி தேசிய அடையாள அட்டையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெற வேண்டும் என்பது தொடர்பாக அரச உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதற்கு அமைவாக இந்த உடன்பாடு காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டைகள் அனைத்திலும் தமிழ், சிங்கள இனபேதமின்றி இரு மொழிகளும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




★ 1041-பைசண்டைன் பேரரசி சோயி தனது வளர்ப்பு மகனை ஐந்தாம் மைக்கல் என்ற பெயரில் பேரரசனாக்கினாள்.

★ 1541-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் மனைவியும் அரசியுமான கத்தரீனுடன் தகாத உறவு வைத்திருந்தமைக்காக தொமஸ் கல்பெப்பர்ம், பிரான்சிஸ் டெரெகம் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1655-யாழ்ப்பாண ஆளுநர் அன்டோனியோடி மெனேசா மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் என்னும் இடத்தில் சிறை பிடிக்கப்பட்டார்.

★ 1684-ஐசாக் நியூட்டன் தனது புவியீர்ப்பு விதிகளின் கொள்கைகளில் எழுதிய கெப்லரின் விதிகளின் தீர்வுகள் றோயல் சபையில் வாசிக்கப்பட்டது.

★ 1817-மிசிசிப்பி ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1868-உலகின் முதலாவது சமிக்ஞை விளக்குகள் லண்டனில் நாடாளுமன்றுக்கு வெளியே நிறுவப்பட்டது.

★ 1898-ஸ்பெயின்-அமெரிக்கா போர் நிறுத்த உடன்பாடு பாரிசில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1901-முதலாவது நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

★ 1902-அஸ்லான் அணை திறக்கப்பட்டது.

★ 1902-தாஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ 1906-அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரோசவெல்ட் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். இது ஒரு அமெரிக்கர் பெற்ற முதலாவது நோபல் பரிசாகும்.

★ 1936-இங்கிலாந்தின் எட்டாம் எட்வேர்ட் மன்னன் முடி துறப்பதாக அறிவித்தான்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: மலாயாவுக்கு அண்மையாக ஐக்கிய இராச்சியத்தின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் ஜப்பானியர்களால் மூழ்கடிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பிலிப்பைன்சை அடைந்தனர்.

★ 1948-மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

★ 1975-ரஷ்யரான அந்திரேய் சாகரொவ் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

★ 1981-தெற்காசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்க பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐ.நா. பொது அவை ஏற்றுக் கொண்டது.

★ 1984-தென்னாபிரிக்க கறுப்பின மதகுரு டெஸ்மண்ட் டூட்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.

★ 1989-மங்கோலியா கம்யூனிசத்தில் இருந்து மக்களாட்சிக்கு அமைதியாக மாற்றம் பெற்றது.

★ 2006-வாகரை மாங்கேணியில் இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் 17 பொதுமக்கள் பலியாகினர்.

### பிறப்புக்கள்

★ 1750- திப்பு சுல்தான், மைசூர் இராச்சியத்தின் மன்னன் (இ.1799)

★ 1804-ஜேகோபி, ஜேர்மனிய கணித மேதை (இ.1851)

★ 1851-மெல்வில் டியூவி, அமெரிக்க நூலக அறிவியலை வளர்த்தவர் (இ.1931)

★ 1878-ராஜாஜி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சுதந்திர இந்தியாவின் முதலாவது ஆளுநர் (இ.1972)

★ 1891-நெல்லி சாக்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1970)

★ 1934-ஹவர்டு மார்டின் டெமின், அமெரிக்க வைரசுகளைப் பற்றிய ஆராய்ச்சிக்காக 1975 இல் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

★ **1896-அல்பிரட் நோபல், சுவீடனைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர் (பி.1833)**

★ 1960- சேர் சிற்றம்பலம், கார்டினர்


★ 1987-சுப்ரமணிய ராஜீ, தமிழ் எழுத்தாளர் (பி.1948)

★ 2001- அசோக்குமார், இந்திய நடிகர் (பி.1911)

★ 2006-ஆகுஸ்டோ பினோச்சே, சிலி நாட்டு சர்வாதிகாரி (பி.1915)

### சிறப்பு நாள்

**அல்பிரட் நோபல்**



அல்பிரட் நோபல், நோபல் பரிசினை உருவாக்கிய சுவீடன் நாட்டு அறிவியலாளர் ஆவார். இவர் டைனமைட் வெடி மருந்தைக் கண்டுபிடித்தவர். அல்பிரட் நோபல் ஒரு வேதியியலாளர், பொறியியலாளர், புத்தாக்குநர். ஆயுதத் தயாரிப்பாளராகவும் திகழ்ந்தார்.

போப்பர்சு என்னும் பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனத்துக்கு உரிமையாளராக இருந்தார். தன்னுடைய கடைசி உயிலின் மூலம் தன் பெரும் சொத்தைக் கொண்டு நோபல் பரிசை நிறுவினார். இவரின் நினைவாக நோபெலியம் (Nobelium) என்னும் Synthetic தனிமம் பெயரிடப்பட்டது.

**வாழ்க்கை**

நோபல், இம்மானுவேல் நோபல் ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் சிட்டாக்கோமில் 1833 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி பிறந்தார். 1842 இல் தன் குடும்பத்துடன் புனித பீட்டர்சுபர்க் சென்றார். இவர் 1896 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானவர்களை விடுவிக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## திருமாவளவன் கோரிக்கை



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இலங்கை அரச படையினரால் கடுமையாக தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கின்றமையை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும். பொய்க்குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் மாணவர்களையும் தமிழ் மக்களையும் விடுவிக்க வலியுறுத்த வேண்டுமென திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவீரர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த தமிழ் மாணவர்களை கண்மூடித்தனமாக தாக்கியது மட்டுமன்றி அவர்களை கைது செய்துள்ளனர்.

அவர்கள் மீது பயங்கரவாத சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. அவர்கள் இருக்கும் இடமும் வெளியில் அறிவிக்கப்படவில்லை. இதனால் வெகுண்டெழுந்த தமிழ் மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகருக்குள் தமிழர்களை வீடுபுகுந்து வேட்டையாடும் நடவடிக்கையில் இலங்கை அரச படைகள் இறங்கியுள்ளது.

40 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கெதிரான போர்க்குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அம்பலப்பட்டு வரும் நிலையில் சர்வதேச நாடுகளின் அழுத்தம் அதிகரித்து வரும் சூழலில் மீண்டும் இனவெறி நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பது எதற்கும் கட்டுப்படாத அதன் போக்கையே காட்டுகிறது.

ஏற்கனவே போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லையென ஐ.நா. உள் அறிக்கை ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில் மேலும் மேலும் தமிழர்கள் வேட்டையாடப்படுவதை வேடிக்கை பார்க்கக்கூடாது.

எனவே இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசை எச்சரிக்க வேண்டுமெனவும் பொய்க்குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் மாணவர்களையும் தமிழ் மக்களையும் விடுவிக்க வலியுறுத்த வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக் கொள்கிறது. (அ-2)

## பொ.சு.பரிசோதகர்கள் அடையாள வேலைநிறுத்தம்

பல கோரிக்கைகளை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக இலங்கை பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்திலும் எதிர்வரும் 17 ஆம் திகதியில் இருந்து தொடர் வேலைநிறுத்தத்திலும் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் உபசெயலாளர் சி.எஸ்.முத்துக்குட குறிப்பிட்டுள்ளார்.

அலுவலக கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு, அதிகரிப்பு எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள 2 வருட காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## இளம்சமுதாயம் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம்

### அகில இலங்கை இந்துமாமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவமும் பொலிஸாரும் கடந்த 27, 28 ஆம் திகதிகளில் நடத்திய தாக்குதலில் மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ்.மண்ணில் மீண்டும் இளம் சமுதாயத்தினர் மீது துன்புறுத்தல் நடத்தப்பட்டு வருகிறது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு இந்து மக்கள் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட தவறான விதத்தை அது தொடர்பான வருத்தத்துக்குரிய சம்பவங்களையும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியிருப்பதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு இப் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உடனடியாக அம்மாணவர்களுக்கு நீதி வழங்குமாறும் அரசாங்கத்திற்கு இப் பகிரங்க வேண்டுகோளை விடுக்கின்றோம். இளம் சமுதாயத்தினர் மீது அரச படைகள் தவறான முறையில் தங்கள் அதிகாரத்தை காட்ட முற்பட்டு தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டு பிரஜைகள் என்ற உண்மையில் சம உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் இருக்கின்றதா? என்ற சந்தேகத்தைக் கிளப்பி அவர்களின் உள்ளத்தில் குழப்பத்தையும் ஏற்படுத்துவது பெரும் தவறு என்பதையும் வேதனையுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

புலிகளை வேட்டையாடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு மாணவர்களை புலிகளாக்குகிறோம். தமிழ் மக்கள் இப்படித் துன்புறுத்தப்படக் கூடாது என்று யாழ்.பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஒரு பெரும்பான்மையினத்தை சேர்ந்த மாணவி தொலைநகல் செய்தி அனுப்பியிருப்பதாக ஆங்கிலப்பத்திரிகையில் ஓர் அறிக்கை வந்திருப்பதையும் கவனிக்கவேண்டும்.


இவ்விடயத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரிய நடவடிக்கை எடுத்து யாழ்.மண்ணில் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.


கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் நம்பிக்கையின்மை, துவேஷ உணர்வு ஆகியவை அகற்றப்பட்டு வேற்றுமையிலும் ஒற்றுமை காணப்படவேண்டும் என்று செய்யப்பட்ட சிபாரிசையும் அரசாங்கம் உதாசீனம் செய்து வருவதும் கவலைக்குரிய விடயமாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## லொறி மோதியதில் 5 பொலிஸார் காயம்

வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது லொறியொன்று மோதியதில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் பல கொல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மூவர் கண்டி வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பலகொல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்பு டைய லொறியின் சாரதி கைது செய்யப்ப ட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-2)





நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்யாழ்.மாவட்ட நிஸ்கோ பிரிவினரால் யா/முத்துத்தம்பி வித்தியாலய மாணவர்களுக்கு எதிர்கால சுயதொழில் முயற்சித் திட்டத்தை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடியை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி ஸ்ரீமேனன் விநோதினி ஏற்றுவதையும் அருகில் [illegible] கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தனங்கிளப்பு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியக் கப்பலை விற்பனை செய்யுங்கள்

## கொழும்பு வணிக நீதிமன்று உத்தரவு

கொழும்பு புறநகர் பகுதியான பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ள மலேசியாவுக்கு சொந்தமான கப்பலை விற்பனை செய்யுமாறு கொழும்பு வணிக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மலேசிய நாட்டிற்குச் சொந்தமான சாக் சிரிசஸ் என்ற கப்பல் கட்டணம் செலுத்தத் தவறியமை காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக பாணந்துறைக் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இக்கப்பல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் கொழும்பு வணிக நீதிமன்றம் குறித்த கப்பலை விற்பனை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

இவ்வுத்தரவினை கப்பல் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாகவும் எனினும் கப்பல் நிறுவனத்திடமிருந்து இதுவரை எவ்வித பதிலும் தமக்கு கிடைக்கவில்லை என வர்த்தக கப்பல் பணிப்பாளர் அஜித் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலுக்கு எதிராக சிங்கப்பூர் நிறுவனமொன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளமையால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்ததாக அறிய வருகின்றது. (அ-2)

# மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு நிவாரணம்

## மகளிர் விவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வீட்டிலும் அலுவலகத்திலும் ஏற்படும் பிரச்சினைகளினாலும் வேலைப்பளுவினாலும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு மனோவியல் ரீதியில் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக பயிற்சிப்பட்டதாரிகளுக்கு மனோதத்துவவியல் தொடர்பாக விசேட பயிற்சிகளை வழங்க இவ்வமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி மகளிர் விவகார அமைச்சின் கீழுள்ள பயிற்சிப் பட்டதாரிகளில் மனோதத்துவவியல் பாடநெறிகளை மேற்கொண்ட 65 பட்டதாரிகளை தெரிவு செய்து அவர்களுக்கு மனோதத்துவவியல் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் பத்தரமுல்லை- தலாஹேன சமூக கல்வி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விசேட மனோதத்துவவியல் பயிற்சிகளை மேற்கொள்ளும் இந்த பட்டதாரிகள் பிரதேச செயலக மட்டத்தில் தமது சேவைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# புதிய பாடநூல்கள் விற்பனை நிலையத்தில்

பாடசாலை மாணவர்களுக்கென வழங்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான புதிய பாடநூல்களை கடதாசி விற்பனை நிலையத்திற்கு விற்பனை செய்த சம்பவம் ஒன்று டிக்வெல்வ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. டிக்வெல்வ பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு வழங்கப்பட்ட புதிய பாடப்புத்தகங்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலையால் அடுத்த ஆண்டிற்கான புதிய பாடநூல்களும் பாதிப்புநிலையிலுள்ள பழைய நூல்களும் கடதாசி விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்கப்பட்ட நிலையில் வீடு ஒன்றிலிருந்து பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து பாடசாலை அதிபர் கருத்துக்கூற மறுத்தபோதும் தமது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியே என தெரிவித்தார்.

இது குறித்து விசாரணை நடத்தப்படும் என பிரதிகல்வி அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார். (அ-2)

# அம்பாறையில் நிலநடுக்கம் மீண்டும் உணரப்பட்டது

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் மீண்டும் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. வடிநாகலை, தேவாலஹிந்த மற்றும் பல்லங்கள பகுதிகளில் இந்த நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேசங்களில் நேற்று முன்தினம் மாலை 6.55 மணி தொடக்கம் 10.06 மணி வரையான நேரப்பகுதியில் இவ்வதிர்வு உணரப்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இந் நில அதிர்வு தொடர்பில் புவி சரிதவியல் மற்றும் சுரங்க தொழில் திணைக்களம் தெரிவிக்கையில்,

சுரங்க தொழில் திணைக்களத்தின் தலைவர் என். பீ. விஜயாநந்த இப்பிரதேசங்களில் நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவித்தார்.

எனினும் அவை சிறிய அளவான நில அதிர்வு எனவும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுட்டுவீழ்த்தப்பட்ட விமானம் குறித்து ஆராய அதிகாரிகள் விரைந்தனர்

(பூநகரி)

லயன் எயார் விமானத்தில் பயணம் செய்த விமானிகள் உடல் எச்சங்களை பூநகரி கடற் கரையில் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் திகதி பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கி 48 பயணிகள் 6 விமானப் பணியாளர்களுடன் புறப்பட்ட லயன் எயார் விமானம் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தை அடையாளம் காட்டியுள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி ஒருவர் விமானத்தில் பயணம் செய்தவர்களின் உடல்கள் விடுதலைப் புலிகளால் பூநகரி கடற்கரை யோரத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்து பூநகரி கரையோரத்தில் விமானிகள் மற்றும் பணியாளர்களின் உடல் களை தேடும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். இதற்கென தடயவியல் நிபுணர்கள் கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரி, மருத்துவ கலாநிதி ஆனந்த சமரசேகர தலைமையிலான சட்டமருத்துவ அதிகாரிகள் அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளை கொண்ட சிறப்பு குழு ஏற்கனவே பூநகரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அன்ரன் ஜெனோஷன் இமாலினி



மக்களோடு
28.07.1978

கர்த்தரோடு
02.12.2010

கனவுகள் மெய்ப்பட உண்மை உணர்வுகளுடன்
அன்புதனைப் பொழிந்து எண்ணமெங்கும் வியாபித்து
எம் நெஞ்சில் நிறைந்த அன்பின் இமாலினியே
கடவுனின் இறைக்கைக்குள் நீ இணைக்கப்பட்டு விட்டாய்
இருந்தும் எம்மனம் உன் நினைவுகளை சுமந்தபடி.....

என்றும் உன் நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள், தாய், தகப்பன், சகோதரர்கள் (பிரான்ஸ்,லண்டன்),
சகோதரிகள் (சுவிஸ்), மச்சான்மார், மச்சாள்மார் (பிரான்ஸ்,லண்டன்),
மாமன்மார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார்.

(சி/1134)


# தெரிவுக்குழு விசாரணை ஒரு பக்கச்சார்பானவை

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகள் ஒரு பக்கச் சார்பானவை என ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த விசாரணைகளும் பிரதம நீதியரசருக்கு எதிரான வகையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன் காரணமாகவே விசாரணைகள் தொடர்பில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

சுயாதீனமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் நோக்கிலேயே இவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்தையும் சட்டம் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

எதேச்சதிகார போக்கிற்கு எதிராக மக்கள் அணி திரள வேண்டியது அவசியமானது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சிந்தனை கொண்ட வள்ளுவன் கழகம்

"விருந்தினர் போற்றுதல் வருந்துதல்
இன்றியே
விருப்புடன் தொண்டு செய்தல்
வியந்திடப் பொதுப்பணி நயந்திட
ஆற்றுதல்
விளங்கிட நிலைத்து நிற்றல்
மருந்தென வாய்த்ததாம் அமிழ்தமே
ஆயினும்
மட்டுமாய் உண்டிடாமல்
மருவிடும் எவர்தமின் பசிப்பிணி
அகற்றுதல்
மாசிலாத் தமிழர் மாண்பு!"

மாசிலா இத்தமிழர் மாண்பு மறைந்து வருகிறது என்பது பலரது கண்ணோட்டம். ஆயின் இன்றைய சுயநல உலகில் கூட மாறாத இம் மாசிலாத் தமிழர் மாண்பு கண்டு வியந்து போகின்றேன்.

ஆம்! இந்த மாண்பை மாண்புறு செவ்விய பண்பை செவிவழிச் செய்தியாய்க் கேட்டறிந்த நான் கடந்த 14.10.2012 அன்று கண்ணாரக்கண்டு, செவியாரக் கேட்டு புள



காங்கிதம் அடைந்தேன். அன்றைய தினம் முதியோர் மனமகிழ்வு விழாவும் சிறுவர் நல நோன்பு நிகழ்வும் வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தினரால் யாழ்.கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன் கலந்து கொண்டார். சிறப்பு விருந் தினராக நல்லூர் உதவிப் பிரதேச செய லாளர் திருமதி சுபாஜினி மதியழகன் கௌரவ விருந்தினர்களாக யா/கோண்டாவில் பரஞ் சோதி வித்தியாசாலை அதிபர் திருமதி கடம்ப மலர் விமலராஜா, யா/ சங்கானை சிவப்பிர காச மகா வித்தியாலய ஆசிரியை திருமதி நவதீசன் உதயலதா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜெய லக்சுமி உதயகுமார், நிர்வாக உத்தியோகத்தர் வ.சுந்திர சேகரமும் கலந்து சிறப்பித்தனர்.

காலை 9.30 மணியளவில் மாணவர்களின் பாண்ட் இசையோடு வெளி வீதி யிலிருந்து விழா மண்டபம் நோக்கி விருந்தினர்களும் முதியோர், சிறுவர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். சிட்டுப் போல் சின்னஞ்சிறார்கள், முதுமையிலும் முகம் மலர்ந்து சிரிக்கும் முதியவர்கள், நிகழ்வில் கலந்து கொண்ட ஏனையவர்கள் அனைவராலும் மண்டபம் நிறைந்து காணப்பட்டது.

பேராசிரியர் சண்முகலிங்கன் தனது மனைவி, மகள், சகோதரியோடு வந்து நிகழ்வைச் சிறப்பித்து மங்கல விளக்கை ஏற்றி வைத்தார். தொடர்ந்து விருந்தினர்கள் மங்கல விளக்கை ஏற்றிவைத்தார்கள். இறை வணக்கத்தை தொடர்ந்து வள்ளுவன் மேம்பாட்டுக் கழக மாணவிகளால் வரவேற்பு நடனம் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து விழா நாயகர்களான முதியோர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஆசி வழங்கப்பட்டது. ஆசியுரையை தில்லையைம்பதி திருக்கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ திவாகரக் குருக்கள், அருட்திரு வணபிதா ஐ.டி டிக்ஷன் ஆகியோர் வழங்கினார்கள். கழகத் தலைவர் அ.ரம்சன்ராஜ் தலைமையுரையை ஆற்றினார். இந்த இளம் வயதினர் இத்தகையதொரு தலைமைத்துவத்தை எங்கிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்று ஆச்சரியப்பட வைக்கிறது. இவர் மட்டுமல்ல இக் கழகத்தின் அங்கத்தவர்களாக செயற்படும் இளைஞர், யுவதிகள் அனைவருமே ஒற்றுமையாகவும் மிகச் சிறப்பாகவும் செயற்பட்ட அழகை அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருமே கண்டுகொண்டோம். இன்றைய இளம் சமுதாயம் தறிகெட்டு பண்பாடு, கலாசார விழுமியங்களை சிதைத்து வேண்டாத பாதைநோக்கிச் சென்று கொண்டிருப்பதை அன்றாடம் அறிந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய சூழலிலே இந்த வள்ளுவன் மேம்பாட்டுக்கழக இளைஞர், யுவதிகள் சமு



தாயப்பணி நோக்கி தம் பாதையை அமைத்துக் கொண்டிருப்பது வியப்புக்குரியது மட்டுமல்ல விதந்துரைக்க வேண்டியதுமாகும். ஒன்றை மட்டும் இங்கே அறுதியிட்டு கூற முடியும். இத்தகைய சேவை மனப்பான்மையும் சமூக சிந்தையும் கொண்ட இவர்கள் சீரான தம் பாதையை விட்டு சீரழிவுப் பாதை நோக்கி செல்லமாட்டார்கள்.

வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தின் முதுகெலும்பாக செயற்படுபவர் சி.ஆனந் தராஜா. இவரது ஆளுமை இந்நிறுவனத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமைகிறது. அவர் தம் உரையிலே தங்களுடைய செயற்பாடுகள், செய்ய இருப்பவைகள் தொடர்பான பலவற்றையும் கூறினார். அவற்றைக் கேட்டபோது உண்மையிலேயே இன்றைய சூழலில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா? இது சாத்தியமா என்று வியந்து போனேன். இந்த வியப்பிற்கு ஒரு காரணம் இந் நிறுவனம் எந்தவொரு நிதி நிறுவனத்தின் உதவியோ வெளிநாட்டு நிதி உதவியோ இன்றி முற்றுமுழுதாக உள்ளூர் நிதி நிலையை அடிப்படையாக வைத்தே இயங்குகிறது. இன்றைய விலைவாசி, பொருளாதார நிலைமையில் இவ்வாறு நிதி ஒதுக்குவது என்பது எவ்வளவு பெரிய விடயம் என்பதை நாம் ஒவ்வொருவருமே புரிந்து கொண்டிருப்போம்.

இந்த வேளையில் இந்த கழகத்தின் செயற்பாடுகள் பற்றிச் சொல்லவேண்டியது எனது கடமையாகின்றது. **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்** என மணிமேகலை சிறப்பிக்க **அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலினும் சிறந்தது ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே** என்று பாரதி சிறப்பிக்கின்றார். கற்கும் ஆர்வம் இருந்தும் கற்க வசதியின்றி எத்தனையோ சின்னஞ் சிறார்கள் எம் பிரதேசங்களில் இருக்கிறார்கள். இத்தகைய வறிய மாணவர்களின் கல்வித் தேவை அறிந்து அவர்களின் கல்வி சிறக்க கற்றல் உபகரணங்களை வழங்கியதோடு தனியார் கல்வி நிலையங்களில் கற்பதற்குரிய கொடுப்பனவுகளையும் இக் கழகம் வழங்கி வருகின்றது. எத்தனையோ மாணவர்களின் குடும்பச் சூழல் அவர்களின் கல்விக்கு தடையாக அமைந்து விடுகின்றது. அன்றாடம் குடிபோதையில் சத்தமிடும் தந்தை, தினமும் சண்டையிடும் தாய்-தந்தை, ஏனைய வீட்டுப் பிரச்சினைகளால் வீடுகளிலிருந்து கற்கமுடியவில்லையே என ஏங்கும் மாணவர்களின் குறைதீர்த்து அவர்களின் கல்விக்கு ஆவன செய்யும் முகமாக அவர்கள் வாழ்கின்ற கிராமங்களிலேயே மாலை நேர வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

தனியே கல்வித்தேவையோடு மட்டும் நின்றுவிடாது மாணவர்களுக்கு வேண்டிய வெவ்வேறு வித உயர் செயற்பாடுகளும் இங்கே செயற்படுத்தப்படுகின்றன. மாணவரின் தலைமைத்துவ பண்பை வளர்த்தல், சமாதானம் நோக்கிய செயற்பாடுகள், கலை வளர்ச்சி முதலான பல்வேறு செயற்பாடுகளும் இங்கே நடைபெறுகின்றன. இச் செயற்பாடுகள் தற்போது கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நான்கு கிராமங்களில் செயற்பட ஆரம்பித்துள்ளன. அச்செழு வளர்மதி பூலசிட்டிக்கிராமம், அச்செழு சடையா கருகிராமம், அச்செழு கொலணி கிராமம், அச்செழு வேவிநகர் பேன்ற கிராமங்களில் இச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 200 மாணவர்கள் வரையில் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது பிரதேசங்களை சுனாமி அலை தாக்கிய கொடிய சுவடுகள் இன்னும் மறைந்து போகவில்லை. அந்த அழிவினால் பாதிப்புற்றவர்களுக்கு வெவ்வேறு வகையில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், இன்றளவும் அந்தக் கொடுமைக்குள் சிக்கி மீண்ட குடும்பங்களை இந்தக் கழகம் மறந்து விடாது உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருப்பதும் உண்மையே. பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி அங்கேயும் மாலைநேர வகுப்புக்களை நடத்துகின்றது.

**தில்லையம்பதியான்**

(தொடரும்)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தே.வா.மாத போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காற்றுறை பிரதேசசபை பொநூலகங்களின் தேசிய வாசிப்பு மாத போட்டி முடிபுகளை ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளர் சு.சுதர்ஜன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**ஊர்காவற்றுறை பொதுநூலகம்**

**கதைசொல்லல்**

டி.மெரித்றொனி (ஊர்காவற்றுறை றோ.க. ஆண்கள் பாடசாலை),ஜெ.பிறின்ரா (புனித மரியாள் மகளிர் கல்லூரி), பி.கிரிஷாளினி (புனித மரியாள் மகளிர் க.)

**பேச்சுப்போட்டி**

இ.பவதாரணி (புனித மரியாள் மகளிர் கல்லூரி),அ.ஜெனிமரியா (புனித மரியாள் ம.க.), யு.மேரிடயானி (புனித மரியாள் ம.க.)

**சித்திரப்போட்டி**

உ.தனுசன் (புனித அந்தோனியார் கல்லூரி), சி.திவ்யன் (புனித அந்தோனியார் க.),த.மஜீத் (புனித அந்தோனியார் க.)

**கட்டுரைப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

ஏ.சாள்ஸ் டிலக்ஸன் (புனித அந்தோனியார் கல்லூரி),மே.அன்ரனிஅன்று (புனித அந்தோனியார் க.), ம.ஆன்டிலானி (புனித மரியாள் மகளிர் கல்லூரி)

**கட்டுரைப்போட்டி (மேற்பிரிவு)**

இ.க்ஜாஜினி (புனித அந்தோனியார் கல்லூரி),கி.சுசிலா (புனித அந்தோனியார் க.), ச.நிவேதன் (புனித அந்தோனியார் க.)

**பொது அறிவுப்போட்டி**

ஜெ.சிந்துஜா (புனித அந்தோனியார் கல்லூரி),ம.ஆனல்ட்சரண்சன் (புனித அந்தோனியார் க.),க.சுவேதா (புனித அந்தோனியார் க.),கு.யோசப் (கொத்திக்குளம்)

**நாரந்தனை பொதுநூலகம்**

**கதை சொல்லல்**

த.டிலோபினா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி),ரி.விதுஷா (சரவணை சின்னமடு றோ.க.ம.வித்தி),பு.சிறியாழினி (தும்பாட்டி அ.த.க.பாடசாலை)

**பேச்சுப்போட்டி**

அ.றெமோஜா (நாரந்தனை றோ.க.மகா வித்தி),கு.நிலாவேணி (தும்பாட்டி அ.த.க. பாடசாலை),சா.நிறோஜினி(தும்பாட்டி அ.த.க.பாடசாலை)

**சித்திரப்போட்டி**

அ.அஜந்தா (நாரந்தனை றோ.க.மகா வித்தி),சு.சாரங்கா (நாரந்தனை கணேசா வித்தி),கி.யோகேணக்கா (கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வித்தி)

(தொடரும்)

# நிறைவேறியது வரவு செலவுத் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில் 158 வாக்குகள் ஆதரவாகவும் 57 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன.

இந்நிலையில் 101 மேலதிக வாக்குகளுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசிய முன்னணி ஆகியன எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)



பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று ஆனையிறவிற்கும் உமையாள் புரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் காலை தடம்புரண்டு விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம். (படம்:- கௌரிகாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்து தான் வலிமையெல்லாம் கிடைக்கிறது.

-காந்தி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# முன்னாள் போராளிகளை வஞ்சம் தீர்க்காதீர்கள்

தென்னையில் தேள் கொட்டப் பனையில் நெறி கட்டியது என்றொரு பழமொழி தமிழ் வழக்கில் உண்டு. இந்தப் பழமொழிக்கும் யாழ்ப்பாணத்தில் தற்போது இடம்பெற்று வரும் குழப்ப நிலைக்கும் நிறையத் தொடர்புண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவம், இப்போது முன்னாள் போராளிகள் உட்பட பொதுமக்களைக் கைது செய்யும் அளவில் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வன்னிப் போரின்போது படையினரின் விசாரணைக்குட்பட்டு, புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்பில் படைத்தரப்பின் அவதானிப்பும் கண்காணிப்பும் இருந்தபடியே உள்ளது.

துன்பச் சுமைக்குள் அகப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களில் அடைபட்டு இப்போது விடுதலை பெற்றிருந்தாலும் வேலைவாய்ப்பைப் பெறுதல், சமூகத்தோடு இணைந்து வாழ்தல் எனப் பல்வகைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் முன்னாள் போராளிகளில் பலர் திருமணமாகி குடும்பச் சுமையைத் தாங்கும் பொறுப்பில் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்தை மையப்படுத்தி முன்னாள் போராளிகளைக் கைது செய்கின்ற படலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதான அடையாளங்கள் தெரிகின்றன.

இது மிகவும் வேதனைக்குரியது. இத்தகைய நிகழ்வுகள் தடுக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்காகக் குரல் கொடுப்பதில் பலமான மாணவர் சக்தி, புத்திஜீவிகளின் தைரியமான கரங்கள் கூடவே பல்கலைக்கழக நிர்வாகம் என்ற ஒழுங்கமைப்பு உண்டு.

ஆனால், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களைக் கைது செய்யும் போது அவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு, அமைப்பு ரீதியாக எதுவும் இல்லையெனலாம்.

எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படைத்தரப்பு நடந்துகொண்ட முறைமைகளோடு ஆரம்பமான குழப்ப நிலையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களின் கைதுகளை நிறுத்த வேண்டும் என்றும்,

நவம்பர் 2012க்கு முன்பிருந்த ஒரு குழப்பமற்ற சூழ்நிலை மீள ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையும் பல்கலைக்கழக புத்திஜீவிகளால் முன்வைக்கப்பட வேண்டும்.

இல்லையேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்ந்தும் ஒரு பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தி நிற்கும்.

எனவே, கைது என்ற விடயத்தில் முன்னாள் போராளிகளையும் பொதுமக்களையும் காப்பாற்றும் தார்மீகப்பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உண்டு என்பதை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மறந்துவிடலாகாது.

# வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வோரில் ஆண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச் செல்லும் இலங்கையர்களில் ஆண்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையை விடவும் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 30 வருட காலத்திற்குப் பின்னர் இந்த நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாக வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமால் சேனலங்காதிகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை 51 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப் பினைப் பெற்றுச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதில் பணியகம் ஆர்வமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக பாரசீக குடாநாடுகளுக்கு செல்வதன் மூலம், இலங்கையில் உள்ள அவர்களது குடும்பத்தினர் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பணியகத்தின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், கிராமப்புற ஆண்களை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுச் செல்வதற்கு ஏற்ற வகையில் பல்வேறு, வேலைத்திட்டங்களை தமது பணியகம் மேற்கொண்டு வருவதாக, பணியகத்தின் தலைவர் அமால் சேனலங்காதிகார தெரிவித்துள்ளார். (ந-11)

# புதிய கட்டிட பிரவேச விழா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக கட்டிட பிரவேச விழா இன்று முற்பகல் 9.21 மணி முதல் 10.22 மணிவரையான சுப நேரத்தில் இடம்பெறவுள்ளதாக பிரதேச சபை அறிவித்துள்ளது. (ந-6)

# ரட்டவிருவோ பாராட்டு நிகழ்வு

(கிளிநொச்சி)

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் நாடு முழுவதும் நடத்த உத்தேசித்துள்ள செலவாணியை வென்ற ரட்ட விருவோ பத்து நாள் பாராட்டு மற்றும் வடமாகாண வைபவமான ரட்ட விருவோ மாவட்ட அமைப்பை நிறுவும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகாரவின் அழைப்பின் பெயரில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ந-9)

# க.பொ.த. பரீட்சையில் 5, 37, 393 பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப் படவுள்ள கல்வி பொது தராதர சாதா ரண தர பரீட்சையில் இவ்வாண்டு 5 இலட்சத்து 37 ஆயிரத்து 393 பரீட் சார்த்திகள் பரீட்சை எழுதவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தகவல் வெளி யிட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் மேற்படி எண்ணிக்கையான மாணவர் கள் பங்குபற்றவுள்ளனர். இதேவேளை, பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளில் தேசிய அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரு புகைப்படங்களை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்து பரீட்சைக்கு தோற்ற முடியும் என பரீட்சை கள் திணைக்களம் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆஸி.புகலிடக் கோரிக்கையாளர்கள் கடல் எல்லையில் வைத்து திருப்பப்படுவர்

## ஆஸி. எதிர்க்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அகதி அந்தஸ்து கோரி அவுஸ்திரேலியா சென்ற இலங்கையர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுறுதீவு நீண்டகாலம் தங்கிவாழக்கூடிய இடம் அல்ல வென்று அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் குடிவரவுப் பேச்சாளர் ஸ்கொட் மோயிசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நவுறுதீவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தடுத்துவைக்கப்பட்டுள்ள இவ் இலங்கையருக்கு அகதி அந்தஸ்து வழங்குவதற்கு நீண்டகாலம் எடுக்கும். இத்தீவு நீண்டநாட்களுக்கு வாழக் கூடிய வசதிகளைக் கொண்டதல்ல.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ள இவர்களில் சில சிறிய அகதிகள் குழுக்கள் ஏனையவர்களையும் தாங்கள் நடத்தும் போராட்டங்களில் கலந்து கொள்ளுமாறு வற்புறுத்துவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அவுஸ்திரேலிய எல்லைக்குள் படகுமூலம் வரும் அகதி அந்தஸ்து கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலிய கடல் எல்லையில் வைத்தே திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். (அ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சினம் ஒரு சங்கிலி



ஒரு குடும்பத் தலைவனுக்கு அடிக்கடி சினம் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். அவனது மனைவி, மக்கள், மனநிலைகள் அதனால் பாதிக்கப்படும். அவர்கள் சோகம் கப்பிய முகத்தினராவார்கள். அவர்களது மனவலிமை குன்றிப்போகும். தோல்வி-மனப்பான்மை அவர்களிடத்தில் தோன்றும். மறைவாகத்தீங்கு செய்யும் குணமுடையவர் ஆவார்கள். அவர்கள் சிடு மூஞ்சிகளானாலும் ஆவார்கள். எளிதில் சினம் வயப்படும் பலவீனத்தையும் அவர்கள் பெற்றுவிடுவார்கள். அம்மட்டோடு போகுமோ, போகாது; சினம் ஒரு சங்கிலி போன்றது. தொற்றுநோய் போன்றதென்றும் சொல்லலாம்.

ஒரு அதிகாரியின் வீட்டுக்குழந்தை அதன் தாயாருக்குத் தன் பிடிவாதப்போக்கினால் கோபமூட்டுகிறது. அதன் விளைவினால் அந்த அம்மா தன் கணவனிடம் எரிந்து விழுகிறாள். அந்த அதிகாரி இந்தக் கோபத்துடன் தன் அலுவலகத்திற்குச் சென்று தன் பணியாளரிடம் சிடுசிடுவென பேசுகிறார். மனம் புண்பட்ட பணியாளர் வீட்டுக்குப்போய் தன் மனைவியிடம் காரணமில்லாமல் கோபித்துக்கொள்கிறார். அந்த அம்மாள் உள்ளக்குமுறலுடன் இருக்கும் சமயம் அவள் குழந்தைவந்து ஏதோ கொடுக்கும்படி அவளை நச்சரிக்கிறது. அவள் ஆத்திரம் தீர அந்தக்குழந்தையை அடித்துவிடுகிறாள். இப்படிச் சினமானது சங்கிலித்தொடர்போலச் சென்று பலருக்கும் துன்பத்தை விளைவிக்கும்.

சினமானது பிறரை எவ்வாறு துன்புறுத்துகிறது எனப் பார்ப்போம். சொந்தமகன், மகள் வாழ்க்கைத்துணை என்று வைத்துக்கொள்வோம்.சினம் எழும்போது அவர்கள் மனம் என்ன பாடுபடுகின்றது என்பதையே நாம் உணரவேண்டும். பிறர் நம்மீது சினம் கொள்ளும்போது நம் மனம் எவ்வாறு நோகின்றது, வருந்துகின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதுபோன்றுதானே பிறர் மேல் நாம் கொள்ளும் சினம் அவர்களுக்கு வருத்தத்தை அளிக்கும் என்று கண்டுகொண்டால், நம்மோடு ஒத்த உறவினர், நமக்கு நலம் செய்பவர்களை இப்படி வருந்தவிடுவது நல்லதன்று என்று தெளிவாகும். எனவே, சினத்தைத் தவிர்க்கத்தான் வேண்டும். அதுமாத்திரமன்று, ஒருவர் மீது சினம் கொண்டால் அது ஒரு அவமதிப்பும்கூட. ஒருவர் மீது சினம் கொள்ளும்போது அவர்கள் படும் வருத்தம் ஒரு சாபமாகவே மாறுகிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது பிறரை எவ்வாறு சினம் பாதிக்கிறது என்பது நன்றாக உங்களுக்குத் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளையோர் கைதாவதை சர்வதேசம் தடுக்க வேண்டும்

## சிறிதரன் எம்.பி வலியுறுத்து

தற்போது ஆட்சி அமைத்து வரும் அரசாங்கம் தமிழர்கள் மத்தியில் அச்சநிலையினை ஏற்படுத்தி இயல்பு வாழ்வினைக் குழப்பும் நோக்குடனேயே வடக்கில் இளைஞர், யுவதிகளைத் தொடர்ந்தும் கைதுசெய்து வருகின்றது. இதனை சர்வதேச நாடுகள் தலையிட்டு தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் எம்.பி தெரிவித்தார்.

வடக்கில் நடைபெற்றுவரும் கைதுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கொழும்பு ஊடகத்துக்கு தெரிவிக்கையில்,

வடக்கில் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை இராணுவத்தினர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தொடர்ந்தும் கைதுசெய்து வருகின்றனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் தாக்கி கைது செய்துள்ளனர். தமிழர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தி அவர்களின் இயல்பு வாழ்வினைக்குழப்பும் நோக்குடனேயே இந்த அரசாங்கம் இவ்வாறு செயற்படுகிறது.

யுத்தத்திற்கு பின்னரான வடக்கின் அபிவிருத்தி என காப்பெற் வீதிகள் மட்டுமே இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மக்களின் வாழ்வாதாரத்தினை வளப்படுத்தி பொருளாதாரத்தினை மேம்படுத்த அரசாங்கம் எதையுமே செய்யவில்லை.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள்,கைத்தொழில் பேட்டைகள் போன்ற எவையுமே வடக்கில் இன்னமும் அமைக்கப்படவில்லை. இதனால் மக்கள் வேலைவாய்ப்புக்கள் இன்றி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இம்மக்களின் இயல்பு வாழ்வினை குழப்பும் நோக்குடன் அரசு செயற்பட்டு வருகின்றது. இதற்காகவே தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைதுசெய்கின்றனர். இதனால் வடபகுதித் தமிழ்மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதனைத் தடுத்து நிறுத்த சர்வதேச நாடுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

# சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை ஏற்கமுடியாது

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைய ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையை தமது கட்சி நிராகரிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் வழங்கிய ஆயிரம் பக்க பதில் ஆவணம் கடந்த டிசம்பர் 5ஆம் திகதி நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

எனினும்டிசம்பர்6ஆம்திகதியன்றுஅதனை படித்துவிட்டு தருமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் நாடாளுமன்றக்குழுவின் தலைவர் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த அளவு வேகமாக இந்த விசாரணை முடிக்கப்பட வேண்டியதன் காரணமும் அதற்கு பின்னால் அரசாங்கத்துக்கு உள்ள திட்டங்களும் சந்தேகத்தை ஏற்படுத்தின.

இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றக்குழுவில் இருந்து வெளியேறியதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்கு

(கொழும்பு)

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதோடு எட்டு மீனவர்களை கடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் மீனவர்கள் 500 விசைப் படகுகளில் நேற்று முன்தினம் கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

குறித்த மீனவர்கள் நடுக்கடல் பகுதியில் வலைவிரித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு சென்ற இலங்கை கடற்படையினர் , மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதோடு படகுகளை சேதப்படுத்தி மீன்பிடி வலைகளையும் அறுத்து எரிந்துள்ளனர்.

மேலும் இரு படகுகளில் இருந்த 8 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடத்தப்பட்டதாக கரை திரும்பிய மீனவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மோப்ப நாய்களுக்கு கமராக்கள்

(கொழும்பு)

குற்றவியல் விசாரணைகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற பொலிஸ் மோப்ப நாய்களுக்கு கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோப்ப நாய்களின் பகுதியில் நவீன தொழில்நுட்பத்திலான கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் தற்போது அதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)


## 60ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 30.11.1946

இறைவன் மடியில் 13.10.2012



(1133)

### சந்தியாப்பிள்ளை நியூமன்.

இளவாலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா மெல்போனை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் சந்தியாப்பிள்ளை நியூமன் அவர்கள் 13.10.2012 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார் என்ற செய்தியை கண்ணீருடன் அறியத்தருவதோடு அவரின் ஆன்ம சாந்திக்காக 11.12.2012 அன்று இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு கொண்டு அவரின் ஆன்மசாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-

அருட் திரு. ச.மரியசெபஸ்ரியன் அமதி (சகோதரன்)

அருட் சகோதரி மேரி சொப்பியா தி.கு.(மைத்துனி)



## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் -2013

சபையானது 2013 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

1. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
3. சித்த மருத்துவ மருந்துகள்
4. நூலகங்களுக்கான நூல்கள்
5. துணி வகைகள்
6. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
7. கற்கள், மணல்
8. தீந்தைகள் வகைகள் (Paints), நிறந்தீட்டும் பொருட்கள்
9. நீர் வழங்கு குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள்
11. மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப்பொருட்கள்
12. எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள்
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனை மரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
17. கணனி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோற் பொருட்கள்
20. அலங்காரப் பொருட்கள்

**சேவைகள்**

1. அச்சிடுதல்
2. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
3. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
4. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல்
5. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
6. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
7. மின் சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல்
8. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
9. வாகனங்கள் சுத்திகரிப்பு
10. கோலவுடை தைத்தல்
11. கணனி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
12. இறப்பர் முத்திரை தயாரித்தல்
13. கழிவகற்றல் சேவை (gully emptier service)

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ***வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2013*** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் ***தலைவர் தலைமை அலுவலகம் நல்லூர் பிரதேச சபை இல. 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்*** எனும் முகவரிக்கு ***31.12.2012 ஆம் திகதி***க்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ப.வசந்தகுமார்
தலைவர்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

(சி705)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் மண் கவ்வியது இந்தியா



இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3-வது போட்டியில் இங்கிலாந்து அணி இலகுவான வெற்றியை பெற்றுள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிருந்த மகேந்திரசிங் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி சச்சின் டெண்டுல்கரின் 76 ஓட்டங்கள், கௌதம் காம்பீரின் 60 ஓட்டங்கள் மகேந்திரசிங் தோனியின் 52 ஓட்டங்களின் உதவியுடன் 316 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனேசர் 4 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அண்டர்சன் 3 விக்கெட்டுக்களை யும், ஸ்ரீபன் பின், கிரேம் ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அலஸ்ரெயர் குக்கின் 190 ஓட்டங்கள், ஜொனதன் ட்ரோட்டின் 87 ஓட்டங்கள், நிக் கொம்ரனின் 57 ஓட்டங்கள், கெவின் பீற்றர்சனின் 54 ஓட்டங்கள், மற்பிரையரின் 41 ஓட்டங்களின் துணையுடன் 523 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 4 விக்கெட்டுக்களையும், ரவிச்சந்திரன் அஷ்வின் 3 விக்கெட்டுக்களையும், சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.


தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரவிசந்திரன் அஷ்வினின் ஆட்டமிழக்காத 91 ஓட்டங்கள், வீரேந்திர ஷேவாக்கின் 49 ஓட்டங்கள், கௌதம் காம்பீரின் 40 ஓட்டங்களின் துணையோடு 247 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணிக்கு 41 என்ற வெற்றியிலக்கை வழங்கியது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ரீபன் பின் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும், மொன்ரி பனேசர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

41 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும் மேலதிக விக்கெட்டுக்களை இழக்காது வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இயன் பெல் 28 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவிச்சந்திரன் அஷ்வின் 2 விக்கெட்டுக்களையும், பிரக்ஜான் ஓஜா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர்-குக் தெரிவானார்.



இவ்வெற்றியை அடுத்து 4 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியின் படு தோல்வி யுவராஜ், சகீர்கான், ஹர்பஜன் அதிரடி நீக்கம்

இங்கிலாந்துக்கு எதிராக 4-வது டெஸ்டில் விளையாடவுள்ள இந்திய அணியிலிருந்து யுவராஜ், ஹர்பஜன், சகீர்கான் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன. முதல் மூன்று டெஸ்ட் முடிபில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளும் மோதும் 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி நேற்று கொல்கத்தாவில் தெரிவு செய்யப்பட்டது.

இதில் மோசமான 'போர்ம்' காரணமாக யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகீர்கான் ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.


இவர்களுக்கு பதிலாக ரவீந்திர ஜடேஜா, பியூஸ் சாவ்லா, பர்விந்தர் அவானா ஆகியோர் வாய்ப்புப் பெற்றனர்.

**4-வது டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி விபரம்:**

மகேந்திரசிங் தோனி (தலைவர்), கௌதம் காம்பீர், வீரேந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், விராட் ஹோலி, ரவீந்திர ஜடேஜா, சட்டீஸ்வர் புஜாரா, ரவிச்சந்திரன் அஷ்வின், அசோக் டிண்டா, பிரக்ஜான் ஓஜா, அஜின்கியா ரகானே, பியூஸ் சாவ்லா, இஷாந்த் சர்மா, முரளி விஜய், அவானா.



# கடைசிப் போட்டியில் கரீபியன்களை மடக்கி தொடரை வென்றது வங்கத்துப் புலிகள்



பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேச போட்டித் தொடரின் 5-வதும் இறுதியுமான போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து பங்களாதேஷ் அணி இத்தொடரை 3:2 என்ற கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

மிர்பூரில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி, அதன்பின்னர் 4-வது விக்கெட்டுக்காக 132 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது.

ஆனால் தொடர்ந்து விக்கெட்டுக்கள் இழக்கப்பட, அவ்வணியால் தேவையான ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரான் பொல்லார்ட் 74 பந்துகளில் 85 ஓட்டங்களையும், டரன் பிராவோ 108 பந்துகளில் 51 ஓட்டங்களையும், டெவோன் தோமஸ் 31 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சபீல் இஸ்லாம் 9 ஓவர்களில் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மகமதுல்லா, மொமினுல் ஹக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சொஹக் கஷி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

218 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 44 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்து.

பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், 4-வது விக்கெட்டுக்காக 91 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

ஆனால் அதன்பின்னர் ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களையும், 6 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களையும் பெற்றிருந்த போதிலும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மகமதுல்லா 45 பந்துகளில் 48 ஓட்டங்களையும், முஷ்பிக்குர் ரஹீம், 56 பந்துகளில் 44 ஓட்டங்களையும், நசீர் ஹொசைன் 52 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும், மொமினுல் ஹக் 50 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியதீவுகள் அணி சார்பாக கேமர் ரோச் 9 ஓவர்களில் 56 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சுனில் நரேன் 10 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மகமதுல்லாவும், போட்டித் தொடரின் நாயகனாக முஷ்பிக்குர் ரஹீமும் தெரிவாகினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 7 மாணவர்கள்...

கட்டுவன்), சின்னையா சசிகாந்தன் (வவுனியா), விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த அம்பலவாணபிள்ளை பிரசன்னா (மட்டுவில்), முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த பி.சபேஸ்குமார் (நல்லூர்) ஆகியோரே விடுவிக்கப்பட்ட மாணவர்களாவர்.

இதேவேளை, முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்பவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவருமான வி.பவானந்தன், கலைப்பீடத்தைச் சேர்ந்தவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளருமான ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரான க.ஜனமேனன், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த எஸ். சொலமன் ஆகிய 4 மாணவர்களும் தொடர்ந்து வவுனியாவில் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், விடுவிக்கப்பட்ட மாணவர்களை உரிய முறையில் பொறுப்பேற்கவும் தடுப்பில் உள்ள மாணவர்களின் விடுதலைக்கு ஆவன செய்யும் முனைப்புடனும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் தலைமையிலான குழுவொன்று இன்று வவுனியாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-1)

# 13-ம் திருத்தத்தை நீக்கக் கூடாது!

## சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இது –ஜோன்

(கொழும்பு)



அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை நீக்கக்கூடாது என்பதே தமது கட்சியின் அதிகார பூர்வ நிலைப்பாடு என்று ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன கூறியுள்ளார்.

தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி விமல் வீரவன்ச தரப்பினருடன் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட உயர்மட்ட பிரமுகர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

13-ம் திருத்தத்தில் குறைபாடுகள் இருந்தாலும் அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு தொடர்ந்தும் அதனை முன்னெடுக்க வேண்டும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்பதை விமல் வீரவன்ச தரப்பினருக்கு விளக்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத்துக்குள் இது தொடர்பில் ஏற்பட்டுள்ள வாதப்பிரதிவாதங்கள் காரணமாக, 13-ம் திருத்தம் நீக்கப்பட்டுவிடும் என்று எவரும் அஞ்சத் தேவையில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார். (ந-11)

## இலங்கைக்கு எதிரா...

குழு விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டாலும் ரஷ்யாவும், சீனாவும் அதற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் என இலங்கை அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ந-11)

## தமிழ் அகதிகளை...

புலிகள் ஒழிக்கப்பட்டு இலங்கை அரசாங்கம் சமாதானம் ஏற்பட்டதாகக் கூறி மூன்றரை வருடங்களாகிய நிலையில் தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டை விட்டுச் செல்வதன் காரணம் இந்த நாட்டில் தமிழ் இளைஞர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதாகும்.

இந்த நாட்டில் சாதாரண தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அவர்களின் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் அங்கு அகதி அந்தஸ்து கோரியுள்ள தமிழர்களை திருப்பியனுப்புவது தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாகுவதற்கு துணைபோகும் நிலைமையை நீங்கள் மேற்கொள்ள மாட்டீர்கள் என நம்புகின்றேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## கழிவு வாய்க்காலில்...

செல்வா சதுக்கத்திற்கு முன்பாக) சேற்றினுள் புதையுண்ட நிலையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் திருநகர் பகுதியைச் சேர்ந்த டேனியஸ் அந்தோனி (வயது-48) என உயிரிழந்தவரின் உறவினர்கள் உறுதிப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு மது போதையில் குறித்த நபர் தடக்கி விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

கழிவுநீரோடும் வாய்க்காலினுள் சடலம் ஒன்று கிடப்பதையறிந்த மக்கள் பெருமளவில் அங்கு கூடியிருந்தனர்.

இதுதவிர இராணுவத்தினரும் விரைந்து அவ்விடத்திற்கு வந்ததை அவதானிக்கக் கூடியதாகயிருந்தது.

பொலிஸாரினால் இடப்பட்டிருந்த மஞ்சள் துணியிலான கடவையைத் தாண்டி உள்நுழைந்த இராணுவத்தினர் இறந்தவர் யாராக இருக்கக்கூடும் என பொலிஸாரிடம் அவ்விடத்தில் வைத்து விசாரித்தனர்.

தலை குப்புறவாக சடலம் இருந்ததனால் உடனடியாக யாராலும் இனம்காண முடியவில்லை.

பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டதோடு உறவினர்களால் இனம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4,6)

## மேலும் 11 பேர்...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 15 பேர் கைது செய்யப்பட்டதாக இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தபோதும் 11 பேரையே பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இதில் பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் எனவும் கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான எண்ணிக்கையை அந்தத் திணைக்களம் இதுவரை வெளியிடவில்லை.

இதேவேளை, ஊடகங்களில் வெளியான தகவல்களின்படி இதுவரை 45 பேர் யாழ். குடாநாட்டிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

## நாடு திரும்ப...

மாதம் முற்பகுதியில் அவர் கொழும்பு திரும்பவுள்ளார்.

கடந்த மார்ச் மாதம், ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, தயான் ஜெயதிலக வெளியிட்ட கருத்து அரசாங்க மட்டத்தில் சர்ச்சையை கிளப்பியிருந்தது.

இலங்கை அரசுக்கும் தயான் ஜெயதிலகவுக்கும் இடையில் அண்மைக்காலமாக சுமுகமான உறவு நிலவவில்லை என அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். (ந-11)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவப்பிரகாசம் பரம்சோதி (அருந்ததி)



(இளைப்பாறிய ஆசிரியை)

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 59, ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பரம்சோதி 09.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவப்பிரகாசம்(ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,

தயாநிதி(ஓய்வுபெற்ற ஆசிரியை), உதயகுமார்(புள்ளிவிபரவியலாளர்-யாழ் மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சிவகுமார் (பொறியியலாளர்), அருட்குமரன், சுந்தரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார் சிவகாமசுந்தரி (வைத்திய நிபுணர்-யாழ்.போதனா வைத்தியசாலை), யாழினி, ரஜீதா (ஆசிரியை -யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புமாமியும்,

காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பொன்னுச்சாமி, ராமையா, மகாராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

அருளினி(கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), சிவகுமாரதாஸ், தனுசன், பரமகம்சன், பவித்திரா, ஈசானன், சாம்பவி, சஜானி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.12.2012 திங்கட்கிழமை(இன்று) பி.ப.1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(இ) 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 0777111722

தகவல்:
சு.சிவப்பிரகாசம்



## அன்புள்ளங்களே! 100

ஆஸ்திரேலியாவில் வணிகம் செய்ய ,தொழில்புரிய நீங்கள் குடும்பமாக செல்லலாம்.
அதற்குரிய சட்டரீதியான ஆலோசனைகளை நாம் தங்களிற்கு வழங்குவோம்.
மேற்படி ஆலோசனைத் துறையில் வடபுலத்தில் தனித்துவமான எம்மிடம் ஆலோசனை பெற்ற 27ஆவது குடும்பத்தைச் சார்ந்த 100வது நபரும் இத்திட்டத்தை வெற்றியடைந்துள்ளமையை வெற்றிப்பெருமிதத்துடன் தங்களிற்கு அறியத்தருகின்றோம்.

இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இன்னும் 5 தினங்களில் மேற்படி ஆலோசனைக்கு புதியவர்கள் இணைத்துக்கொள்வதை நிறுத்திக் கொள்ளப்போகின்றோம்.

மேலும் இத்திட்டம் மீள ஆரம்பிக்க வெகுநாட்கள் செல்லலாம். எனவே இத்தருணத்தை பயன்படுத்துவது உசிதம் மிகுதியை நேரில் பேசிக் கொள்வோமா? காலை 7 முதல் இரவு 7 மணி வரை எல்லா நாட்களும் உங்களுக்காகக் காத்திருப்போம்.

(க-1736)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016



உண்மையுள்ள
G.T. உலகசேகரம்
பொதுமுகாமையாளர்



## இதய அஞ்சலி

### அமரர் பரம்சோதி சிவப்பிரகாசம்
(அருந்ததி ரீச்சர் -மண்டைதீவு)



ஓய்வுபெற்ற அதிபர் திரு.க.சிவப்பிரகாசம்
அவர்களின் அன்புத் துணைவியாரும்,
மண்டைதீவு மகாவித்தியாலய ஓய்வுபெற்ற
ஆசிரியருமான

**திருமதி பரம்சோதி சிவப்பிரகாசம்**
**(அருந்ததி ரீச்சர்-மண்டைதீவு)**

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலியைத் செலுத்தி
அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளில்
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள்
மண்டைதீவு ம.வி

(இ)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org